Free Circulation Germany- England
மணி: 73 - ஓசை: 325 ஐப்பசி. October. 2023




Vettimaniy
# வெற்றிமணி
ESTD 1950
29TH years IN EUROPE Successful Publishing
பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன். B.F.A

# இலங்கையை அதிர வைத்த காணொளியும் அது சொன்ன செய்தியும்!

இலங்கையில் இருந்து ஆர்.பாரதி

## புத்தக வாசிப்பு பழக்கம் இப்போ அதிகரித்துவிட்டதா?



வெற்றிமணி ESTD 1950
325 ஆவது
இதழில் ஒரு கௌரவிப்பு



## அகரம் த.இரவீந்திரன் கௌரவ ஆசிரியர் கௌரவம் பெறுகின்றார்



## யேர்மனியில் ஏறுவரிசையில் தமிழர் தெருவிழா!




# அன்று தாயகத்தில் உங்கள் பெற்றோருக்கும் தெரிந்த பெயர் பிறைட்டன்

## பிறைட்டன் கடை 1988





மாதவி

யேர்மனிக்கு 1979 களில் தமிழர்கள் இலங்கையில் இருந்து வந்தபோது, தமிழர்களுக்கு மொழி, வேலை, குளிர், உணவு, இவையே முதல் எதிர்கொண்ட பிரச்சினைகளாக இருந்தன. என்ன தான் இங்கு உணவு இருந்தாலும் சுள் என்று உறைப்பாக உண்ணவில்லை என்றால் வயிறு தாங்காது.

அரிசி, வெங்காயம், கறிப்பவுடர் இப்படி சில இருந்தன. எங்கட இலங்கை மிளகாய்த்தூள் கிடையாது. Frankfurt இல், முல்கைமில், பண்டாரி இந்தியன் கடை மட்டுமே இருந்தது. நகரம் விட்டு நகரம் போக அனுமதியற்ற காலம். ஏலம் கிராம்பு என்று எல்லாம் அலையமுடியாது.

அப்படியான ஒரு காலத்தில் ஒரு தமிழர் கடை ஒன்று இருந்தால் எப்படி இருக்கும், அம்மாடி அம்மாவைக் கண்டது போல் அல்லவா இருக்கும்.

அப்படி ஒரு அங்காடி டோட்மூண்ட் நகரில் 1988 ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பித்தவர் பிறைட்டன். கடைப்பெயரும் பிறைட்டன்.

வீடும் வேலையும் என்று போன வாழ்க்கை கடைவீதிக்கு சென்று வருகிறேன் என்று சொல்லி எம்மை வெளிக்கிட வைத்தது. பிரதான பொழுது போக்கு வீடியோவில் படம் பார்ப்பது, அந்த படங்களை பிறைட்டன் கடையில் எடுத்தோம் , கடலை வடை தோசை, மரக்கறி, மீன், என்று இலங்கை உணவுகள் வீடுகளுக்குள் புகுந்தது.

தாயகத்தில் உள்ள பெற்றோருக்கு நாம் இங்கு இப்ப எல்லாம் பிரைட்டனில் வாங்கலாம் என்று எழுதிய கடிதங்கள் பெருத்த ஆறுதலானது. அவர்கள் வாயிலும் பிரைட்டன் நுழைந்தது.

சனிக்கிழமை களில், வலைப்பந்தாட்டம், கிரிகெட், உதைபந்தாட்டம் என இளைஞர்கள் ஒன்று கூடும் இடமாகவும், கடை அமைந்தது.

திரையில் யேர்மனியில் முதல் பார்த்தபடம் அக்கினி நட்சத்திரம்.அதனையும் திரையில் வெளியிட்டது பிரைட்டன்.

இவ்வாறு ஆரம்பகாலத்தில் கலக்கிய, கைகொடுத்த மனிதர் அவர்.அவருக்கு யேர்மனியில் தமிழர் தெருவிழாவில், மாலை அணிவித்து கௌரவித்தது மகிழ்வான செய்தி. வெற்றிமணி பத்திரிகையின் வாழ்த்துகள்.







வெற்றிமணி

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்

ஓசை : 325


ஆரம்பம்: 1950

ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
( முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன். பரமானந்தர் வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
'ஓவியக்கலைவேள்'
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன்
Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A



Tel: +49 01631992333
+49 01631992333

e-mail: vettimaniy@hotmail.com


"வெற்றிமணிமொழி"
தோல்வியைக் கண்டு அஞ்சுபவர்களிடமிருந்து வெற்றி தானாகவே விலகிச்செல்கிறது


Vettimaniy Ltd
Company No: 8876276


# வெற்றிமணியின் 325 ஆவது இதழில், அகரம் த.இரவீந்திரன் கௌரவ ஆசிரியர் கௌரவம் பெறுகின்றார்

வெற்றிமணி பத்திரிகை இன்று தனது 325 வது இதழை விரிக்கிறது. கடந்த காலங்களில் ஒவ்வொரு வருடமும் பங்குனி மாதம் பெண்கள் தினம் (பங்குனி 08) வரும் வேளை, ஒரு சாதனைப் பெண்ணை அந்த மாதத்தின் வெற்றிமணியின் கௌரவ ஆசிரியராக நியமித்து, கௌரவிப்பது, வழக்கம். ஆனால் 29 வருடங்களில், எந்த ஒரு ஆணையும் இப்படிக் கௌரவம் செய்தது இல்லை.

ஆனால் வெற்றிமணி தனது 325 வது இதழ் ஒலிக்கும் வேளை தன் துறையோடு பயணிக்கும் ஒரு சாதனையாளரை கௌரவ ஆசிரியராக ஐப்பசி மாதம் கெரவிக்க முடிவு செய்தது.

அப்போது கண்முன்னே தெரிந்தவர் அகரம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் திரு. த.இரவீந்திரன் அவர்கள். 2019 ஆண்டு வெற்றிமணி வெள்ளிவிழா போது திரு ரவீந்திரன் அவர்களுக்கு வாழ்நாள் சாதனை விருது வழங்கி கௌரவித்தது யாவரும் அறிந்ததே. இன்று ஐப்பசி மாத இதழுக்கு கௌரவ ஆசிரியராக கௌரவிக்க வெற்றிமணி பத்திரிகை திரு த.ரவீந்திரன் அவர்களை தெரிவு செய்கிறது. தெரிவு செய்யக் காரணம் இவைதான்.

நான்தான் முதல் செய்தேன் என்பது ஒருவரது சிந்தனையின் சிறப்பு என்றால், அதனை எவ்வளவுகாலம் தொடர்ந்து செய்தேன், செய்கின்றேன் என்பது எவரும் சிந்திக்க முடியாத, பல சோதனைகளைக்,




கடந்தவர்களது பெரும் சிறப்பு என்பது, வெற்றிமணியின் கணிப்பு. அந்தவகையில், அகரம் சஞ்சிகையை 13 ஆண்டுகளாக தொடர்ந்து மாதம் மாதம் வெளியிடுவது என்பது சாதாரண விடையம் அல்ல. முக்கியமாக நாம் அச்சில் வெளிவரும் சஞ்சிகைகள் பற்றியே பார்க்கின்றோம், அதற்கான பொருட்கள் செலவு,முக்கியமானது, மின்னிதழ்கள் மின்னுவதற்கும், அச்சில் ஒரு ஊடகம் வருவதற்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளன. அச்சில் வெளிவரும் ஊடகங்களுக்குப் பின்னால் பல சுமைகளைச் சுமதந்தாக வேண்டும்.

வியாபார ஸ்தாபனங்கள் கைகொடுக்கின்றன என்பது மறுப்பதற்கு இல்லை, ஆனால் அவற்றை செயற்படுத்தி பலன் பெற உழைப்பு அவசியம். இது எல்லோரும் செய்துவிட முடியாது. வெற்றிமணியின் முதல் வெற்றி அதன் வடிவமைப்பு. இதனை கணனியின் தொழில் நுட்பம் குறைந்த 1994 ஆண்டிலேயே நிரூபித்த பத்திரிகை,வெற்றிமணி. இன்றுவரை 29 வருடங்கள் அதனை தக்கவைக்கும் நிலையில் உள்ளது. அப்படியான ஒரு பத்திரிகை வேறு ஒரு சஞ்சிகையை சிறப்பாக நோக்கியது என்றால் அகரம் சஞ்சிகையின் நேர்த்தியான வடிவமைப்பும் ஒரு காரணமாகின்றது. உழைப்பு நேர்த்தி, இவற்றை நீண்டகாலம், தனது துறையில் கடைப்பிடிக்கும் திரு ரவீந்திரன் அவர்களை வெற்றிமணி யின் 325 வது இதழான ஐப்பசி மாதம் இதழுக்கு கௌர ஆசிரியராக கௌரவிப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றோம். இவரது ஏனைய பணிகள்.

19வருடங்களாக நுவுசுவானொலியை தொடர்ந்து நடத்தல்,9 வருடங்களாக, அகரதீபம் ஆன்மிக சஞ்சிகை வெளியிடுதல், அத்துடன் நாடகம்,குறும்படம், பட்டிமன்றம் என பல துறைகளிலும் கால் பதித்தவர் என்னும் சிறப்புக்கு உரியவர். ■

என்றும் தமிழுடன்
மு.க.சு.சிவகுமாரன்
பிரதம ஆசிரியர்
வெற்றிமணி பத்திரிகை யேர்மனி

---

# இலங்கையை அதிர வைத்த காணொளி!

## சர்வதேச விசாரணை நடக்குமா?

ஈஸ்டர் தாக்குதல் குறித்து செப்டம்பர் முதல் வாரத்தில் லண்டனைத் தளமாகக் கொண்ட சனல் 4 வெளியிட்டிருக்கும் காணொளிதான் இலங்கை அரசியலில் ஒரு மாதமாக பேசு பொருளாகியிருக்கின்றது. இது தொடர்பில் சர்வதேச விசாரணை ஒன்று இடம்பெறுமா என்ற கேள்வியும் பலமாக எழுப்பப்படுகின்றது.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இடம் பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பில் சா்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை தமிழர் தரப்பினரால் மட்டுமே எழுப்பப்பட்டது. ஆனால், ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை சிங்களக் கட்சிகளாலும் பரவலாக முன்வைக்கப்பட்டிருக்கின்றது.

இதற்கு மேலதிகமாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் பிரதி ஆணையாளரும் மனித உரிமைகள் பேரவையின் 54 ஆவது கூட்டத் தொடரை ஆரம்பித்துவைத்து செப்டம்பர் முதல் வாரத்தில் நிகழ்த்திய உரையில், இது தொடர்பாக முக்கியமாகக் குறிப்பிட்டிருந்தது இந்தக் கோரிக்கைக்கு மேலும் பலம் சோ்க்கின்




றது. சனல் 4 காணொளி வெளிவருவதற்கு முன்னதாக கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் மட்டும்தான் இந்தப் பிரச்சினையைக் கைகளில் எடுத்திருந்தார். இப்போது, சனல் 4 உருவாக்கியிருக்கும் சூறாவழியைத் தொடர்ந்து பெரும்பாலான சிங்களக் கட்சிகள் இந்த விவகாரத்தை கைகளில் எடுத்துள்ளன.

04 ஆம் பக்கம் பார்க்க...




03 ஆம் பக்கத் தொடர்ச்சி...

# இலங்கையை அதிர வைத்த காணொளி!

## சர்வதேச விசாரணை நடக்குமா?



இலங்கையிலிருந்து
ஆர்.பாரதி

சனல் 4 இல் ராஜபக்ஷக்கள் குற்றவாளிகளாகக் காட்டப்படுவது இதற்கு ஒரு அரசியல் ரீதியான காரணமாக இருந்தாலும், சிங்களக் கட்சிகளின் காய் நகர்த்தல்களுக்கு இது ஒரு வாய்ப்பைக் கொடுத்திருக்கின்றது. அடுத்த வருடம் தேர்தல் வருடமாக இருப்பதால், சிங்களக் கட்சிகள் இந்த காணொளியை கைகளில் எடுத்திருப்பது எதிர்பார்க்கக்கூடியதுதான்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மட்டும் அமைதியாக நிலைமைகளை அவதானித்துக்கொண்டிருக்கின்றார். ராஜபக்ஷக்களை வெட்டி விட்டு தனித்துச் செயற்படுவதற்கான வாய்ப்பை இந்தக் காணொளி அவருக்கு ஏற்படுத்திக்கொடுக்கலாம். இவ்விடயத்தில் ரணில் என்ன செய்வார் என்பதைத்தான் ராஜபக்ஷக்களும் அச்சத்துடன் பார்த்துக்கொண்டிருக்கின்றார்கள்.

### அசாட் மௌலான சொன்ன கதைகள்

கிழக்கு மாகாண முதலமைச்சராக இருந்த பிள்ளையானின் உதவியாளராக செயற்பட்ட அசாட் மௌலானா தெரிவித்த தகவல்களை அடிப்படையாக வைத்துத்தான் இந்தக் காணொளியை சனல் 4 தயாரித்துள்ளது. பிள்ளையானுடனும் இலங்கையின் தேசியப் புலனாய்வுப் பிரிவின் தலைவரான சுரேஷ் சாலேயுடனும் ஏற்பட்ட முரண்பாடுகளைத் தொடர்ந்தே அசாட் மௌலான இலங்கையிலிருந்து கடந்த வருட இறுதியில் வெளியேறியதாகச் சொல்லப்படுகின்றது.

தமிழகத்துக்குச் சென்ற அசாட் மௌலானா, பின்னர் அங்கிருந்து சுவிட்சர்லாந்துக்குச் சென்றுள்ளார். அங்கு அவர் அரசியல் அடைக்கலம் கோரியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. ஜெனிவா மனித உரிமைகள் பேரவையிலும் இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் உட்பட பல்வேறு அரசியல் படுகொலைகள் குறித்து அசாட் மௌலானா சாட்சியம் வழங்கியிருக்கின்றார்.

பிள்ளையானுடன் பல வருடங்களாக ஒன்றாகப் பயணித்தவர் என்ற முறையில் பிள்ளையானின் செயற்பாடுகளை நேரில் அறிந்த ஒருவர் அசாட் மௌலானதான். ஈஸ்டர் தாக்குதல் எதற்காக நடத்தப்பட்டது, இதன் பின்னணியில் இருந்தது யார், இதற்கான தயாரிப்புக்கள் எவ்வாறு முன்னெடுக்கப்பட்டது போன்ற பல தகவல்களை இந்தக் காணொளியில் அசாட் மௌலானா விபரிக்கிறார்.

இந்தக் காணொளியில் தோன்றும் மற்றொருவர் கால்துறை முக்கிய அதிகாரியான நிசாந்த டி சில்வா. இவர் மைத்திரி – ரணில் நல்லாட்சிக் காலத்தின் போது, முக்கியமான விசாரணைகளுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டவர். ராஜபக்ஷக்களின் காலத்தில் இடம்பெற்ற லசந்த விக்கிரமதுங்க கொலை, பிரகித் எக்னெலிய கொட காணாமலாக்கப்பட்ட சம்பவம், ரக்பி வீரர் வாசிம் தாஜுதீனின் மா˙மக் கொலை போன்றவை குறித்து விசாரணைகளை நடத்தி முக்கியமான தகவல்களை அவர் சேகரித்திருந்தார்.

அந்த நிலையில் ஆட்சிமாறி கோட்டாபய ஜனாதிபதியாகப் பதவியேற்ற போது, நிசாந்த சுவிட்சர்லாந்தில் தஞ்சமடைந்தார். சனல் 4 காணாளியில் அவரது சாட்சியமும் முக்கியமாக இருக்கின்றது. காவல்துறையில் முக்கியமான பொறுப்பில் இருந்தவர், ராஜபக்ஷக்களின் செயற்பாடுகள் தொடர்பில் விசாரணைகளை நடத்தியவர் என்ற முறையில் அவரிடமுள்ள தகவல்களும் பெறுமதியானவை.



### காணாளி சொன்ன செய்தி இதுதான்..

இந்தக் காணாளி சொல்லும் பிரதான தகவல் இதுதான்! ஈஸ்டர் தாக்குதல் ஐ.எஸ். தீவிரவாதிகளால் நடத்தப்பட்டது எனக் கூறப்பட்டாலும், ராஜபக்ஷக்களை மீண்டும் அதிகாரத்துக்குக் கொண்டுவருவதற்காக நன்கு திட்டமிட்ட முறையில் நடத்தப்பட்ட தாக்குதல்தான் இது என்பதுதான் இதன் சாராம்சம். அதாவது இஸ்லாமியத் தீவிரவாதிகள் இதற்காகப் பயன்படுத்தப் பட்டுள்ளார்கள்.

இந்த காணொளி வெளியாயிருக்கும் தருணம் இரண்டு விடயங்களில் முக்கியம் பெறுகிறது. முதலாவது ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் ஆரம்பமாக இருந்த தருணம். இரண்டாவதாக இலங்கையில் ஜனாதிபதி தேர்தல் அடுத்த வருட முற்பகுதியில் இடம் பெறும் என எதிர்பார்க்கப்படுகிற நிலைமை. இவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் இந்தக் காணொளி அமைந்திருக்கின்றது.

ஜெனிவாவில் ஆரம்பமாகியுள்ள ஐநா மனித உரிமைகள் பேரவை கூட்டத் தொடர் இலங்கையை பொறுத்தவரையில் இம்முறை முக்கியமான ஒன்றாக இருக்காத போதிலும் கூட, இலங்கை தொடர்பான அறிக்கை ஒன்று அங்கு வெளியிடப்பட்டது. இந்த அறிக்கையில் காராசாரமாக எதுவும் இல்லை என்ற போதிலும் கூட, பொறுப்பு கூறல்விடயத்தில் முன்னேற்றம் எதுவும் இல்லை என்பது தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் தன்னுடைய கரிசனையை வெளிப்படுத்தியிருந்தார்.

இந்த நிலைமையில் தான் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பிலும் பொறுப்பு கூறப்பட வேண்டும் என்பது இந்தக் காணொளி மூலமாக உணர்த்தப்பட்டு இருக்கின்றது. அது பிரதி ஆணையாளரின் உரையிலும் பிரதிபலித்தது.

### சர்வதேச விசாரணை! வலுக்கும் கோரிக்கை

ஈஸ்டர் தாக்குதலுக்கும் சர்வதேச விசாரணை அவசியம் என்பது மனித உரிமைகள் பிரதி ஆணையாளரின் அறிக்கையில் வலியுறுத்தப்பட்டது. அதேவேளையில் பேராயர் மல்கம் ரஞ்சித் மட்டுமன்றி, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, சரத் பொன்சேகா ஆகியோரும் கூட சர்வதேச விசாரணையை வலியுறுத்தி பாராளுமன்றத்தில் உரையாற்றுவதற்கு இந்தக் காணொளி காரணமாக இருந்துள்ளது.

அதாவது பொறுப்பு கூறல் விடயத்தை பொறுத்தவரை வெறுமனே உள்நாட்டு விசாரணை மீது நம்பிக்கை வைக்க முடியாது என்பதையும் சர்வதேச விசாரணையை இதற்கு அவசியம் என்பதையும் இந்த காணொளி உணர்த்தியிருக்கின்றது. எதிர்க்கட்சிகளின் தலைவா˙களே இதனை வலியுறுத்தும் நிலையில், போரில் இடம் பெற்ற மீறல்களை விசாரிக்கவும் சர்வதேச பொறிமுறைதான் அவசியம் என்பது உணர்த்தப்படுகின்றது.

ஜனாதிபதி தேர்தல் அடுத்த வருடம் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படும் நிலைமையில், அந்தத் தேர்தலிலும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய வகையில் இந்த காணொளி அமைந்திருக்கின்றது. கடந்த வருடம் இடம்பெற்ற அரகலய போராட்டத்தின் போது ராஜபக்ஷாக்களின் செல்வாக்கு



பெருமளவுக்கு வீழ்ச்சி அடைந்திருந்தது. தமது பகுதிகளுக்கு கூட செல்ல முடியாத நிலைமை அவரது கட்சிக்கு ஏற்பட்டிருந்தது. இப்போதுதான் அவர்கள் தமது கட்சியை கொஞ்சம் கொஞ்சமாக கட்டமைத்து கொண்டு வருவதற்கு முனைந்து கொண்டிருக்கும் நிலைமையில் இந்த காணொளி வெளியாகி அவர்களுடைய நிலைமையை மேலும் மோசமாக்கியுள்ளது.

சனல் 4 வெளியிட்டு இருக்கும் காணொளி என்ன தான் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் உண்மைகளை வெளிக் கொண்டு வருவதாக சொல்லி இருந்தாலும் கூட, இது ராஜபக்க்ஷக்களை இலக்கு வைத்த ஒரு காணொளி என்பது வெளிப்படை. இதனுடைய தாக்கத்திலிருந்து அவர்கள் வெளியே வருவது இப்போதைக்கு சாத்தியமானது அல்ல.

ராஜபக்ஷக்களில் ஒருவர் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவார் என அவரது குடும்பத்தினர் தெரிவித்து வந்த நிலைமையில், அதற்கான சாத்தியத்தை இந்த காணொளி பெருமளவுக்கு இல்லாமல் செய்துள்ளது. மறுபுறத்தில் இது ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஓரளவுக்கு சாதகமானதாக உள்ளது. ரணிலைப் பலப்படுத்துவதற்காகத்தான் இந்தக் காணொளி இப்போது வெளியிடப்பட்டது என்ற ஒரு கருத்தும் பரவலாக உள்ளது.

### சர்வதேச விசாரணை சாத்தியமான ஒன்றா?

இந்த சம்பவம் குறித்து சர்வதேச விசாரணை ஒன்று சாத்தியமானதா என்ற கேள்விக்கு, ஆம் என்ற பதிலைத்தான் சா˙வதேச ராஜதந்திரிகள் தெரிவிக்கின்றார்கள். மனித உரிமை மீறல்கள் தொடா˙பில் விசாரணைக்கான சர்வதேச ஆணைக்குழு International commissions of inquiry (COIs) ஒன்றை அமைப்பதற்கான அதிகாரம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு உள்ளது.

இறுதி யுத்தத்தின் போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற தீர்மானம் 2019 இல் ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்டது. அதில் ஈஸ்டர் தாக்குதல் குறித்தும் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், இலங்கை அரசாங்கம் இதுவரையில் அதனை நிராகரித்தே வருகின்றது.

ஆனால், ஈஸ்ட்டர் தாக்குதல் தொடர்பில் சா˙வதேச விசாரணை ஒன்று அவசியம் என சர்வதேச அழுத்தங்கள் அண்மைக் காலத்தில் அதிகரித்து வருகின்றது. குறிப்பாக, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் என்பன இந்தக் கோரிக்கையை பலமாக முன்வைக்கின்றன. கடந்த ஜுலையில் அமெரிக்க பிரதிநிதிகள் சபையிலும் இது தொடா˙பான தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. இதனைவிட, இந்தத் தாக்குதலில் அமெரிக்கர்களும் உயிரிழந்திருப்பதனால் இவ்விவகாரம் தொடர்பில் சர்வதேச விசாரணை ஒன்றை நடத்துவதற்கான சாத்தியம் குறித்து தாம் ஆராய்வதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உலகளாவிய குற்றவியல் நீதிக்கான தூதுவர் பெத் வான் ஸ்காக் தெரிவித்திருக்கின்றார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் பதில் இல்லாத பல கேள்விகள் உள்ளன. இதனைத் திட்டமிட்டது யார் என்பது முதலாவது கேள்வி. புலனாய்புத் தகவல் கிடைத்திருந்தும் இதனைத் தடுத்து நிறுத்த இலங்கை அரசாங்கம் ஏன் தவறியது என்பது இரண்டாவது கேள்வி. இலங்கை அரசாங்கம் நடத்திய விசாரணைகளில் இவற்றுக்கான பதில் கிடைக்கவில்லை. ஆக, சர்வதேச விசாரணை ஒன்று மட்டுமே உண்மைகளை வெளிக்கொண்டுவரும்.



# மரபணு மாற்றப்படும் விலங்குகளா நாம்?

இருபத்தோராம் நூற்றாண்டின் எல்லையில் வாழ்கிறோம். எண்ணுக்கணக்கற்ற நோய்களும், துன்பங்களும் சூழும் உலகமாக இது மாறியிருக்கிறது. இந்த மாற்றங்களை உருவாக்கியது யார் அல்லது எது என்ற கேள்விகளை நம்மினம் சிந்திப்பதில்லை. தொடர்ச்சியாக நாம் பலவீனப்பட்ட மனிதர்களாக மாற்றப்பட்டுக்கொண்டிருக்கிறோம். விஞ்ஞானம் என்பது பொய்ஞானமாகமாறி நம்மை அழித்துவருகிறது. நம்மவர்கள் விஞ்ஞானத்திற்குள் சிக்கி அழிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இவையெல்லாவற்றினதும் அடிப்படை என்பது யாரும் சிந்திக்காத கோணத்தில் இருக்கிறது. மனிதரை ஆதிகாலப் பண்பிற்கு மாற்றுவது தான் அது.

த.இரவீந்திரன்
(அகரம் சஞ்சிகை
பிரதம ஆசிரியர்) யேர்மனி


நவீன உலகில் நம்மைத் தற்போது அதிகம் பாதிப்பது நாம் உண்ணும் உணவில் ஏற்படுத்தப்படும் மரபணு மாற்றம். இது மனிதனின் உடல் மற்றும் சிந்தனைகளில் மாற்றத்தை ஏற்படுத்துகிறது. மரபணு மாற்றப்பட்ட காய்கறிகள் உட்கொள்ளும்போது முதலில் ஒவ்வாமையால் அனைவரும் பாதிக்கப்படுவர். உதாரணமாக, இத்தனை நாட்கள் கத்தரிக்காய் சாப்பிட்டுக் கொண்டு இருந்த நீங்கள் இந்த மரபணு மாற்று கத்தரிக்காயை சாப்பிடும்போது உங்கள் உடல் ஏற்றுக்கொள்ளாது.

புற்றுநோய் வருவதற்கு பல காரணங்கள் இருந்தாலும் மரபணு மாற்றப்பட்ட காய்கறிகளால் மலட்டுத்தன்மை, அழற்சி அல்லது புற்றுநோய் வரவும் வாய்ப்பிருக்கிறது. மனிதனின் மரபணு கூட பாதிக்கப்படலாம். உங்கள் உடலில் நோய்கிருமி பரவ ஆரம்பிக்கும். என்னதான் நுண் தொற்று இருந்தாலும், நோய் எதிர்ப்பு சக்தி ஆதிக்கம் அதி கம் இருப்பதால் நோய்வாய்ப்பட வாய்ப்பிருக்கிறது.

இது எந்த மருந்து கொடுத்தாலும் அடங்காது. காரணம் ஒவ்வொரு முறையும் காலத்திற்கு ஏற்ப கிருமிகள் வளர்ச்சியடைகிறது. பாதிக்கப்படும் பல்லுயிர்ச்சூழல் மரபணு மாற்றப்பட்ட விதைகளால் காற்றின் மூலம் மகரந்தச் சேர்க்கை மூலமாக மரபணு மாற்றப்பட்ட பயிரிலிருந்து, மரபணு மாற்றப்படாத பயிர்களுக்கு காற்றின் மூலம் நச்சுக்கள் பரிமாற்றம் நடைபெறுகிறது.

கெட்ட மகரந்தச் சேர்க்கை பரிமாற்றத்தால் நல்ல விளைச்சலும் நச்சுத்தன்மை ஏற்பட வாய்ப்பிருக்கிறது. அதாவது தாவரங்களும் உணவு விளைச்சலும் நச்சுத்தன்மை அடைய வாய்ப்பிருக்கிறது. விவசாய நிலமும் பாதிக்கப்படும். அதுமட்டும் அல்லாமல் பல்லுயிர், அதாவது பால் தரும் பசு எவ்வாறு புல்லையும் இலையையும் நம்பி இருக்கிறதோ, அதுபோல மனிதன் மண்ணையும் அதில் விளையும் விளைச்சலையும் நம்பி இருக்கும் நிலையில் நச்சுத்தன்மை இருந்தால், எவ்வாறு பல்லுயிர் தாக்கப்படுவதோடு ஒரு உயிரினம் மற்றொரு உயிரினத்தை சார்ந்து இருக்கும் என்ற அறிவியல் சுழற்சி கோட்பாடும் இங்கு பாதிக்கப்படும்.

இவற்றால் மனிதர்களின் “இனம்” என்ற அடிப்படை சிதைக்கப்படும். எல்லோரையும் ஒரே கூரைக்குள் கொண்டுவந்து, ஆதிமனிதன் போல ஆக்குவதே இதன் அடிப்படை. இந்த அடிப்படையை மேற்கொண்டுவிட்டால், உலகில் ஒரே உணவு, ஒரே மருந்து, ஒரே விதமான கல்வி, என அனைவரும் மாறிவிடுவர். இந்த மாற்றம் உலகை ஆளுகைக்குள் வைத்திருக்கவிரும்புகின்ற “வல்லரசு”



ஒன்றில் கைக்குள் மனித இனம் சிக்குவதை இலகுவாக்கும்.

இவற்றால் தமிழருக்கு என்ன பாதிப்பு என்கிறீர்களா ? முதலில் தமிழருக்குத்தான் இதில் வேகமான பாதிப்பு ஏற்படும். இன்னும் இரண்டு தலைமுறைக்கு பிறகு தந்தை மற்றும் தாய் என்ற அடிப்படைக் குடும்பக் கட்டுமானம் உடையும். ஏனெனில் தமிழரிடத்தில் இருக்கும் இந்த வாழ்வியற்கட்டுமானம் அபரிமிதமானது. உலகில் வேறெங்கிலுமில்லாத உணவுப்பழக்கமும், இலக்கிய வளமும், மொழிவளமும் கொண்டவர்கள் தமிழர்கள். இனம், விடுதலை, பண்பாடு என்ற சிந்தனைகளிலிருந்து தமிழர்கள் மெல்ல மெல்ல மாற்றப்படுவர்.

உணவே உங்களுக்கு வாழ்வையும் நோயையும் தரவல்லது. இனி வாழ்வைவிட நோயே உங்களுக்கு அதிகம் ஏற்படுத்தப்படும். நோய் வந்தவுடன் நீங்கள் நவீன மருத்துவத்தை நாடுவீர்கள். நவீன மருத்துவம் உங்கள் நோயை அதிகரிக்கும். அந்த நோய் பரம்பரையாகத் தொடரும்வண்ணம் உங்களுக்குத் தரப்படும் மருந்துகள் மூலம் உங்கள் பிள்ளைகளுக்குத் தொடரும். இது சுழற்சி முறையில் நடக்கும்வேளை, இன்னும் மூன்று தலைமுறைக்குள் தமிழர்கள் காலம் காலமாகப் போற்றிவந்த குடும்ப அடிப்படை உடையும். தந்தையும் தாயும் பெற்றுப் போட்ட இரு மனிதர்கள் என்ற அடிப்படையில் குழந்தைகள் சிந்திக்கத் தொடங்குவர். அப்படியே குடும்பத் தொடர்புகள் அற்றுப் போய் நமது வாழ்வியற் கட்டுமானம் சிதைந்து, உலக மனிதப்பரம்பலின் வாழ்விற்குள் சிக்குவோம். இதுதான் இந்த மரபணு மாற்றப்பட்ட உணவுகளின் அடிப்படை.

இவற்றிலிருந்து மீள வழியில்லையா என்றெல்லாம் அங்கலாய்க்கலாம். ஆனால் அது மிகத் தாமதமான காலமாக மாறியிருக்கிறது. பாரம்பரிய உணவிற்கு மாறுதலே இதற்குள்ள ஒரே வழி. ஆனால் அது சாத்தியப்படக்கூடிய ஒரே இடம் நமது தாயகம் தான். தாயக உணவுப்பொருட்களை நுகர்வது சற்றே இந்த அபாயத்திலிருந்து தப்ப உங்களை வழிசெய்யும். ஆனால் அதுவே நீடிக்கும் என்பதை உறுதிசெய்வது உங்கள் அடுத்த தலைமுறையின் கைகளில் மட்டுமே உள்ளது.



விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# Lucky Fly Reisebüro

Mob: 0179 1484 892 | Tel:0234 23 990 32 | Fax: 0234 7945 7171

ஆடம்பரமான அழகான கப்பலில் எட்டு நாட்களும், கட்டாரில் இரு நாட்களும் சுற்றுலா.

(17.12.2023- 19.03.2024 Every Sunday)

ROUND TOUR : Doha-Abudhabi-Sir Bani yas Island - Dubai










Qatra Airways

Ab
€799 - € 849
Ticket To
Colombo
40 kg

Düsseldorf
Or Frankfurt




Inside Cabin +flight
€ 1749

Ocean Cabin + flight
€ 1899

Balcony Cabin+flight
€ 2025

**Free Food and Entertainment**




City tour - Full day /Desert Safari tour full day




உங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்.

e.mail: info@L-Fly.de | www.L-fly.de

Mob: 0179 1484 892 | Tel:0234 23 990 32 | Fax: 0234 7945 7171

Essener Str.26 44793 Bochum-Germany



# பெண்கள் ஏன்
## அரசியலுக்குள் வருவதில்லை!

முன்னொரு காலத்தில் 'வீடு பெண்ணுக்கு, நாடு ஆணுக்கு' என்று சொல்லிவைத்தது போல் 'குடும்ப நிர்வாகம் மட்டுமே பெண்ணுக்கு' என்று இன்றுமே பலர் நம்புகிறார்கள். இதனால் அரசியல் நிகழ்வுகளாக இருந்தாலும் சரி , அரசியலாக இருந்தாலும் சரி, சராசரி பெண்கள் பலர் பெரிதாக ஆர்வம் காட்டுவதில்லை.

இதையும் தாண்டி அரசியலில் ஈடுபட்டு, தேர்தல் களம் கண்டு அமைச்சர்களாகவும் நாட்டைக் கட்டிக்காக்கும் தலைவர்களாகவும் ஜனாதிபதிகளாக பிரதமர்களாக என பல்வேறு முக்கி பொறுப்புக்களை, பதவிகளை பெண்கள் வகித்திருக்கின்றனர் என்பதை மறுப்பதற்கில்லை.

ஆனாலும் , உலக அளவில் உள்ள பெண்களின் மொத்த விகிதாசாரத்தில் எத்தனைபேர் இப்படி அரசியலினுள் கோலோச்சியிருக்கின்றனர் ? அல்லது அப்படியே அரசியல் பிரவேசம் செய்யும் பெண்களில் எத்தனை பேருக்கு முக்கிய பொறுப்புக்கள் வழங்கப்படுகின்றன? கீழைத் தேயங்களைப் பொறுத்தவரையில் முக்கிய கட்சிப் பதவிகள் பெண்களுக்கு கொடுக்கப் படுவதும் அரிது. பெண் வாக்காளர்களை

**ஆங்கிலேயே காலனித்துவத்தின் கீழ் இருந்த நாடுகளில் முதன் முதலில் பெண்களுக்கும் வாக்குரிமை வழங்கப்பட்ட நாடு இலங்கை.**



கவர பெண் தலைவர்கள் தேவைப்பட்டாலும், பெண்கள் பெரிய அளவில் தனிப்பட்ட புகழ் அடைவது மிகவும் அரிது. இலங்கையிலும்கூட மிகச் சிறந்த பெண் அரசியல் தலைவர்களை கடந்து வந்திருக்கிறோம், என்றாலுமே ஏன் நிலைமை இன்னும் பெரிய அளவில் மாறாமல் இருக்கிறது?

1931இல் இலங்கையில் சர்வஜன வாக்குரிமை அறிமுகப்படுத்தப்பட்டபோது ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஏக காலத்தில் வாக்குரிமை வழங்கப்பட்டது. ஆங்கிலேயே காலனித்துவத்தின் கீழ் இருந்த நாடுகளில் முதன் முதலில் பெண்களுக்கும் வாக்குரிமை வழங்கப்பட்ட நாடு இலங்கை. வளர்ச்சியடைந்த பல நாடுகளில் கூட அப்போது பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்படவில்லை. இத்தனை பழமையான வரலாறு இருந்தும் கூட இலங்கையில் பெண்களின் பிரதிநிதித்துவம் இன்றுவரையில் 6.5ஐ இதுவரைத் தாண்டியதில்லை!

உளவியல் ரீதியாக பார்க்கும் போது, சமூகம் சார்ந்த பொதுவான அணுகுமுறையில் ஆணுக்கும் பெண்ணுக்கும் இருக்கும் வேற்றுமை இதற்கு ஒரு முக்கிய காரணம் என்பது விளங்குகிறது. சில ஆராய்ச்சியின்படி பெண்கள், ஆண்களை விட 'தனித்துவமானஅடையாளம்' என்ற வகையில் பின்தங்கி உள்ளனர் என்று கண்டறியப்பட்டுள்ளதாம் . ஆண்கள் இளம்பிராயம்



முதலே தனக்கான சுயகௌரவம், தன்னை முன்னிலைப் படுத்துதல், போட்டிமனப்பான்மையுடன் விளங்குதல் , தன்னுடைய உரிமைகளை நிலைநாட்டுதல் போன்றவற்றில் ஈடுபாட்டுடன் வளர்க்கப்படுவதாகவும், பெண்களை பொறுத்தவரை உறவுகளை முதன்மையாகக் கருதி,



பிரியா இராமநாதன்
(இலங்கை)

மாறுபட்ட, முரணான (conflicting) பொறுப்புகளை திறம்பட கையாள்வதே முக்கியம் என்பதாக வளர்க்கப்படுவதாகவும் அந்த ஆராச்சிகள் குறிப்பிடுகின்றனவாம் .

ஆண்களைப் போல பெண்களால், அரசியல் மற்றும் குடும்ப வாழ்க்கையை ஒருசேர நன்றாக வைத்துக்கொள்ள முடியாது என்கிற கருத்தும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதே . ஏனெனில் , ஒரு ஆண் முழு நேர அரசியலில் ஈடுபடுகையில் , பெண்ணானவள் குடும்பத்தை நிர்வகித்துக்கொள்வாள் எந்த குற்றச்சாட்டிகளுமின்றி . ஆனால்

இதே ஒரு பெண் அரசியலில் ஈடுபடுவாளாயின் அவளுக்கு அவளது குடும்பம் எந்த அளவிற்கு அனுசரணையாக இருக்கும் என்பதனை கூறமுடியாது. இதனாலேயே அரசியலில் இருந்தால் குடும்பத்தைப் பார்த்துக்கொள்ள முடியாது என்று பெரும்பாலான பெண்கள் அஞ்சுகின்றனர்.

அரசியல் வாரிசுகளாக இல்லாமல் அடிப்படை உறுப்பினராக இருந்து முன்னேறும் பெண்களுக்கு கள அரசியல் மற்றும் குடும்ப வாழ்க்கையில் சமநிலை, பொருளாதாரம் என எண்ணற்ற தடைகள் உள்ளன.அதுமட்டுமன்றி ஒழுக்க விதிகளின் அடிப்படையில் பெண்கள் மீது விழும் குற்றச்சாட்டுகளும், அவதூறுகளும் பெண்களை அரசியல் பேசுவது மற்றும் அரசியலில் ஈடுபடுவதில் இருந்து தடுக்கிறது என்றும் கூறவேண்டும்.

இது ஒருபக்கம் என்றால் எல்லா துறைகளிலும் இருப்பது போல அரசியலிலும் பாலியல் தொந்தரவுகள் அதிகம். சினிமா என்கிற துறையைவிடவும், அரசியலில் பெண்களுக்கு நிகழும் பாலியல் வன்முறைகள் அதிகம் என்கிற குற்றச்சாட்டுகளைப் பெருமளவில் அவதானிக்கமுடியும். இப்படிப்பட்ட பாலியல் தொந்தரவுகளால் சத்தம் இல்லாமல் அரசியலைவிட்டே விலகிய பல பெண்கள்இருக்கிறார்கள்.

இந்த பாலியல் தொந்தரவுகளை எதிர்த்து வெற்றிபெறும் பெண்கள்தான் தொடர்ந்து அரசியலில் நீடிக்கிறர்கள். இதுதான் யதார்த்தம். மேலும், ஆண்கள் அதிகமாகபுழங்கக்கூடிய இடங்களில் முக்கியமானது அரசியல். ஊழல், கொள்ளை போன்ற மோசமான குற்றங்கள் அதிகம் நடக்கக்கூடிய இடமாகவும் அரசியல் களம் இருக்கிறது. அதனாலேயே பெண்கள் அரசியலில் வர விரும்பினால்

28 ஆம் பக்கம் பார்க்க...



விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



Jaffna SUPER.MARKT
Jaffna Super markt
Lebensmittel aus Asien, Afrika,China und Orient
எம்மிடம் நம்பி வாங்கோ!.. சந்தோமாகப் போங்கோ!!..
4 YEARS ANNIVERSARY
4 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு
மாபெரும் மலிவு விற்பனை!
From Münster Hbf  only 4 minute working distence
வாருங்கள்! தரமான பொருட்களை!! மலிவாகப் பெற்றுச் செல்லுங்கள்!!!
பசுமையான மரக்கறி வகைகள்
Mon- Sat 9.00-20.30
வாடிக்கையாளர்களின் ஆதரவிற்கு எமது மனமார்ந்த நன்றி
பசுமையான மரக்கறிகள், கடல் உணவுப் பொருட்கள் மற்றும் மளிகைப் பொருட்கள் அனைத்தும் தரமாகவும், மலிவாகவும் என்றும் பெற நாடுகள்
Tel:0179 2310 560 Wolbecker Str.16a 48155 Münster (Eingang von Bremer Platz neben Parkhaus Ausgänge)



# காதல் திருவிழா

சாதகம் பொருந்தீட்டுதாம் அடுத்தது என்ன மாதிரி எண்டு புரோக்கர் கேக்க, "தம்பி ஒருக்கா பொம்பிளையை பாக்கோணுமாம்" எண்டு மாப்பிளையின்டை அம்மா சொன்னா. கலியாணம் எண்டு பேசத் தொடங்கின உடனயே பேசிறதை குறைச்ச தம்பி, நான் எப்ப அம்மாவைக் கேட்டனான் எண்டு யோசிக்க, "அதுக்கென்ன வெள்ளிக்கிழமை நல்லூரில காலமை பூசையில பாப்பம் 'எண்டு முடிவாகிச்சுது. ரெண்டு பெண்டாண்டிக் காரரா இருந்தாலும் நல்லூரான் நல்லது செய்வான் எண்டு பெண்பார்க்கும் படலம் பொதுவா இங்க தான் நடக்கும் .

அப்ப கொழும்பில Majestic City மாதிரி யாழ்ப்பாணத்தில எல்லாப் பெடியளுக்கும் லேசியா பெட்டைகளை பாக்கிறதெண்டால் நல்லூர் தான். கொடியேத்தத்தில பாத்து மஞ்சத் தோட கேட்டு திருக்கலியாணத்தில ஒப்பேத்தின கதைகள் சில இருக்கு. பாக்காமல் காதல் , பாத்தவுடன் காதல், படித்ததோட காதல், பழகிப் பாத்து காதல், எண்ட மாதிரி நல்லூரில பாத்து ஆனால் பேசாமலே ஒப்பேறிற காதல் தான் கனக்க.

காலமை கோயிலுக்கு வாற பிள்ளைகள் அநேமா அம்மாமாரோட தான் வருவினம். குறூப்பா வாறதுகள் பின்னேரம் தான். குறூப்பா வாறதில ஒண்டைப் பாக்க வெளிக்கிட்டால் அதோட கூட வாறது எங்களைப் பத்தி ஏதாவது அள்ளி வைச்சு கவித்துப் போடும். இவளவை எல்லாம் சாணக்கியச் சகுனிகள், " ஏற்கனவே இருக்காம் , இவன் எல்லாரையும் பாக்கிறவன்,போன நல்லூரில இன்னொண்டுக்குப் பின்னால திரிஞ்சவன்" எண்டு சொல்லி முளைக்காமலே கிள்ளிப் போடுங்கள்.

ஆனால் பெடியள் எல்லாம் ஆம்பிளை அன்னங்கள். " மச்சான் உன்டை ஆளைக் கண்டனான் இண்டைக்கு சிவப்பு சாறியோட , சாமிக்குப் பின்னால தான் வாறா , அம்மாவைக் காணேல்லை ஆரோ ஒரு அக்கவோட தான் கண்டனான் " எண்டு GPS lo cation accurate ஆ தருவாங்கள். இதை எல்லாம் சொல்லீட்டு வெளிக்கிட முதல் " என்டை ஆளைக் கண்டனியே" எண்டு ஏக்கத்தோட கேக்கிறவனுக்கு இல்லை எண்டாம, " மச்சான் எப்பிடியும் சங்கீதக் கச்சேரிக்கு வருவா கண்டு பிடிக்கலாம்" எண்டு நம்பிக்கையை குடுத்திட்டுப் போவான் மற்றவன்.

என்னைப் பொறுத்தவரை நல்லூர்க்கந்தன் காதல் கந்தன் . நீளமும் அகலமுமான வீதி, இடது பக்கம் ஆம்பிளைகள் வலது பக்கம் பொம்பிளைகள் எண்டு பாக்கிறதுக்கு சுகமான segregation, திரும்பிப் பாத்து யாரிட்டையும் மாட்டுப்படாம நேராவே பாக்க வசதியா சாமியைப் பாத்து நடக்கிற வழமை , அடிக்கடி சாமியை நிப்பாட்டி வைக்கிற மண்டபப்படி, சாமியே நிண்டு கேக்கிற பத்மநாதனின்டை நாதஸ்வரம் எண்டு கண்ணோடு கண்ணை நோக்க எல்லா வசதியும் முருகன் செய்து தருவான் .



**Dr.T. கோபிஷங்கர்**
(யாழ்ப்பாணம் அரச வைத்தியசாலை)
இலங்கை

நல்லூருக்க ஒரு பிள்ளையப் பாத்து ஒப்பேத்திறது எண்டால் அது கொஞ்சம் பெரிய வேலை. அவ்வளவு பெட்டைகளுக்குள்ளையும் ஆளைப் பாத்து select பண்ணிறதே கஸ்டம். இண்டைக்குப் பாத்து இதுதான் எண்டு முடிவெடுத்துட்டுப் போக அடுத்த நாள் என்னுமொண்டு நல்லதாத்



தெரியும் இல்லாட்டி முதல் நாள் பாத்தது ஏற்கனவே book பண்ணீட்டாங்களாம் எண்டு ஏக்கங்கள் ஏமாற்றங்களாகும். இதை எல்லாம் தாண்டி சரியானதைக் கண்டுபிடிச்சு பிறகு எந்த barrierஆல உள்ள வாறது, எங்க சைக்கிள் விடிறது, எங்க செருப்பு விடிறது, எத்தினை மணிப்பூசைக்கு வாறது, ஆரோட வாறது , உள்வீதி மட்டும் சுத்துமா வெளிவீதியும் சுத்துமா திரும்பிப் போகேக்க எங்க கச்சான் வாங்கிறது , இசைக் கச்சேரி கேட்டிட்டுப் போகுமா கேக்காமப் போகுமா எண்டு நிறைய intelligence report எல்லாம் எடுத் திட்டுத் தான் வேலை தொடங்கிறது.

முதல்ல கொஞ்சம் கொஞ்சமா பின்னால போய், அதுகும் அவைக்குத் தெரியாமப் போய், அதுக்குப் பிறகு கொஞ்சம் தெரியிற மாதிரிப் போக வெளிக்கிட, பிள்ளைக்கு தெரியவர முதல் அம்மா கண்டுபிடிச்சு முறைச்சுப் பாக்க பல காதல் மொட்டுக்கள் கண்ணகி அம்மாக்களின் கண் பார்வையிலேயே கருகிப்போகும். அதோட நாங்கள் பாக்கிறதை கண்டுபிடிச்சு எங்களைத் திரும்பிப் பாக்காமல் அம்மாக்களிடம் காட்டிக்கொடுக்கப்பட்டு காணாமல் போன காதல்களும் உண்டு. இதையும் தாண்டி புனிதமாகிறது சில love வுகள் தான். பின்னால வாறதைக் கண்டு பாத்தும் பாக்கமல் நிக்கிறது தான் முதலாவது சமிக்கை, இதுவே நம்பிக்கையை ஒளியைத் தரும். அவளவை ஒரு நாளும் நிமிந்தோ திரும்பியோ பாக்கமாட்டினம் ஆனாலும் நாங்கள் பின்னால வாறது தெரிஞ்சு கச்சான் கடை, செருப்புக் கடையில கொஞ்சம் கூட நேரம் மினக்கிடிறது எங்களுக்காகவே இருக்கும், இது நம்பிக்கையை தும்பிக்கை ஆக்கும்.

முதல்ல அம்மாவோட வந்தவை அம்மாவை விட்டிட்டு பக்கத்து வீட்டு அக்காவோட வாறது நல்ல சமிக்கை. ஏற்கனவே எங்களைப்பத்தி சொல்லப்பட்டிருக்கும் அக்காவுக்கு. வாற அக்கா வடிவா ஏற இறங்க எங்களைப் பாத்து குடுக்கிற report ல தான் முடிவு தங்கி இருக்கும். கடைசீல அக்காவும் வெட்டப்பட்டு ஒரு friend ஓட வருவினம் , இப்ப முக்கியம் அந்த friend க்கு நீங்கள் நல்லவராகத் தெரியிறது. அந்தப்பக்கம் அம்மா அக்காவாகி, அக்கா friend ஆகேக்க நாங்களும் அந்த பரிணாம வளரச்சிக்கு ஏத்த மாதிரி பலவாகத் தொடங்கி , அக்காவோட வரேக்க ரெண்டாகி, friend ஓட வரேக்க தனியா இருக்க வேண்டும் இல்லாட்டி சில "நல்ல " நண்பர்களினால் அவளவையின்டை friends reject பண்ணிப் போடுவினம் .

ஆயிரம் பேர் இருந்தாலும் பாத்தோண்ணயே இது தான் எனக்கு எண்டு பெடியள் முடிவெடுத்திடுவாங்கள் ஆனால், பெட்டைகள் அப்பிடி இல்லை.முக்கி முக்கி six pack வைச்சவனையும்,

28 ஆம் பக்கம் பார்க்க...








# யேர்மனியில் ஏறுவரிசையில் தமிழர் தெருவிழா!














## ஒரு விவசாயி இயற்கை மீது கொண்ட நம்பிக்கைக்கு ஈடாக செயற்பாட்டாளர்கள்!

வெள்ளி,சனி,ஞாயிறு (01,02,03. புரட்டாதி 2023) முன்று தினங்களிலும் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து சிறப்பித்தனர்.

தமிழர் கலையான பறை முழக்கத்துடன் விழா ஆரம்பமானது. பல்லின மக்களையும் உள்வாங்கி கலை நிகழ்வுகள் இடம் பெற்றது சிறப்பு, அதனால் பார்வையாளர்களாக, பல்லின மக்களையும் உள்வாங்க முடிந்தது.

நல்ல கால நிலை, நல்ல உணவுகள், கடைகள் என சிறப்பாக இருந்தது, Dortmund நகரபிதா, மற்றும் தமிழ் ஆர்வலர்கள் குதிரையாட்டம், காவடியாட்டம், புடைசூழ மேடைக்கு அழைத்து வரப்பட்டனர். விழா ஒருங்கிணைப்பாளர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

உள்ளரங்க நிகழ்ச்சிகளை திட்டமிட்டு,நன்கு விளம்பரம் செய்து,நல்லகலைஞர்களை வரவழைத்தும்,உள்நாட்டு கலைஞர்களின் அர்ப்பணிப்பான உழைப்பிலும் ஒரு சிறந்த நிகழ்ச்சியைத் தந்துவிட முடியும்.

ஆனால்! ஆனால்!! ஆனால்!!! இப்படி எத்தனை ஆனால்கள் வெளியரங்க நிகழ்சிகளுக்கு சொல்லலாம். அதில் ஒன்றைச் சொல்வது என்றால், ஒரு விவசாயிக்கும் வெளியரங்க நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களுக்கும், கைகொடுப்பது இயற்கையே. எந்த நம்பிக்கையில் ஒரு விவசாயி விதைக்கின்றான், அறுவடை செய்கின்றான், அதே நம்பிக்கைதான் இங்கும் வெளியரங்க ஏற்பாட்டாளர்களுக்கும் உண்டு.

ஆனால் எந்த பதட்டமும் இன்றி, நம்பிக்கையுடன் செயலாற்றி தெருவிழாவை வெற்றிவிழா வாக்கிய ஒவ்வொரு உழைப்பாளிக்கும் வெற்றிமணியின் வாழ்த்துகள். மேலும் அடுத்த வருடம் பல புதியவை புகுவனவாக மேலும் மெருகுறும் என எதிர்பாக்கலாம். காரணம் ஏறுவரிசையில் தமிழர் தெருவிழா ஏற்றமுற வளர்கி ன்றது.

டொட்மூண்ட் மாநகரில்....
தமிழர் அரங்கம்
வெள்ளிக்கிழமைகளில்
Jeden Freitag
கீபோர்ட் (Keyboard)
18:00–19:00
அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகிறது.சிறுவர்களில் இருந்து பெரியோர்கள் வரை இணைந்து கொள்ளலாபம்
Für Kinder und Jungendliche und Erwachsene!
6€ Pro Stunde
தமிழர் அரங்கம்
Rheinische Srt.76-80
44137 Dortmund
Info:0151 633 633 33
0178 146 006 3
தமிழ் மொழி (Tamillsche Sprachunterricht)
16:00–17:45
Free
அ ஆ இ ஈ உ
சிறார்களுக்கும்,இளையோர்களுக்கும், எளிமையான முறையில் தமிழ் கற்பிக்கப்படும்.
Für Kinder und Jungendliche!Auch speziell jugendliche, die sich mit der tamilische Sprache nicht auskennen
யேர்மன் மொழி (Deutsch für Anfänger / Innen)
ICH LERNE DEUTSCH
19:15– 20:15
யேர்மன் மொழியில் பேசவும் எழுதவும் கற்பிக்கப்படும் யேர்மன் குடியுரிமை பெறுவதற்கு பயன் உள்ளதாக அமையும்
6€ Pro Stunde
விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# இலங்கையில் காப்பி செய்கை, தேயிலைத் தோட்டம் இரப்பர்த்தோட்டம் என்று பணப்பயிரான காலம்

**மாணிக்கவாசகர் வைத்திலிங்கம்**

இலங்கையில் காப்பி செய்கை, தேயிலைத் தோட்டம் இரப்பர்த் தோட்டம் என்று பணப்பயிரான காலம். இக்கால செய்தியை சுருக்கமாக தர முனைகிறேன்.

காப்பிச் செடிகள் இலைச்சுருட்டி நோயினால் கடுமையாக பாதிக்கப்பட்டன. காப்பிப் பயிராகும் நிலங்களை என்ன செய்வது என்ற பிரச்னை தோன்றியது. இதற்கு விடை தேயிலைப் பயிர் என்று முடிவு செய்யப்பட்டது. 1867-இல் ஹேவாஹெட்டையில் உள்ள ஊல்கந்தை என்ற இடத்தில் ஜேம்ஸ் டெயிலர் என்பவர் 50 ஏக்கர் நிலத்தில் வெற்றிகரமாகத் தேயிலையை உற்பத்தி செய்தார். இதனைத் தொடர்ந்து படிப்படியாக இலங்கையின் மலைப்பகுதி “லிப்டன்‘ கம்பெனியின் தேயிலைத் தோட்டமாக மாற்றமடைந்தது.

1870- ஆம் ஆண்டு வாக்கில் பணப்பயிர்த் தோட்டங்களில் எதிர்பாராத திருப்புமுனை ஏற்பட்டது.

காப்பிப்பயிர் வீழ்ச்சி அடைந்தவுடன் தமிழர்களைக் கணிசமாக விரட்டிய இலங்கை அரசும் துரைமார்களும் மீண்டும் தமிழ்நாட்டுக் கூலிகளைத் தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்ய இறக்குமதி செய்ய ஆரம்பித்தனர். இந்தியா இலங்கைக்கு வடக்குப் பக்க மாக இருந்ததேசம்.அதனால் அங்கிருந்து வந்த மக்களை வடக்குத் தேசத்தவர் என்று அழைக்கலாயினர். நாளடைவில் வடக்குத தேயர் என்று மருவி வடக்கத்தையர் என்று மாறி விட்டது. இந்த நேரம் தோணி என்கின்ற படகில் மூலம் தெலுங்கரும் கன்னடரும் களவாக வேலைக்கு வந்தார்கள். இவர்களை கள்ளத்தோணி என்றழைத்தார்கள். இது ஒரு பழிச்சொல்லாகிவிட்டது

1911- ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட ஒரு புள்ளி விவரத்தின்படி,அந்த ஆண்டில் மலையகத் தமிழர்களே (5,30,983) ஏனைய தமிழர்களைவிட (5,28,024) எண்ணிக்கையில் அதிகம் இருந்தனர். தமிழகத்து ஏழைக் கூலி விவசாயிகளை இலங்கைக்குக் கூட்டம் கூட்டமாகக் குடியேற வைத்துவிட்டகாரணத்தால் சிங்களவர் பயந்தனர். வெறுப்புக் கொண்டனர் .தாங்கள் ஒதுக்கப்பட்டு விடுவோம் என்றே நினைத்தனர்.

அந்த நேரம் உயர் பதவிகளில் தமிழர்கள் தான் ஆதிக்கம் செலுத்தினர். தேயிலை தோட்டங்களில் ஆள் சேகரிப்போர் தமிழ்நாட்டின் செல்வாக்குப் பெற்றவர்கள். அதாவது துரைமார்களின் அடிமைகளான இந்தக் கூலி விவசாயிகளைத் தமிழ்நாட்டிலிருந்து திரட்டியவர்கள் அந்தந்தக் கிராமத்தில் செல்வாக்குள்ளவர்களாக இருந்தவர்கள்தான். இவர்கள் கங்காணி என்று அழைக்கப்பட்டனர். இலங்கைக்கு மனிதக் கூட்டத்தை ஏற்றுமதி செய்யும் பொறுப்புடன், ஏற்றுமதி செய்யப்பட்ட மனிதப் பட்டாளத்தை மேய்த்து, கண்காணிப்பதால் இவர்களுக்கு கண்காணி-கங்காணி என்ற பெயர் ஏற்பட்டது.



வெளிநாட்டவர்களின் ஒரு நேரக் கூத்து அல்ல இவர்களது வாழ்க்கை…



இப்படித் திரட்டப்பட்ட தொழிலாளர் கோஷ்டி இந்த கங்காணியின் முழுக்கட்டுப்பாட்டில் இருந்தது. தலைமைக் கங்காணி அல்லது பெரிய கங்காணி சில சில்லறைக் கங்காணிகளை இப்பணியில் தனது ஏஜெண்டுகளாக வைத்திருப்பார். பெரிய கங்காணியின் வரையறையில்லாத அதிகாரமும், அவர்கள் இழைத்த அடக்குமுறைச் சுரண்டல் அட்டூழியங்களும், மனித நாகரிகத்திற்கே சவால் விடும் காட்டுமிராண்டித் தனமானவை ஆகும்.

தமிழ்நாட்டில் தனது கிராமத்தைவிட்டுப் புறப்படும் முன்னர் தான் பட்ட கடனைத் தீர்ப்பதற்காகவும்,

12 ஆம் பக்கம் பார்க்க...



விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# இலங்கையில் காப்பி செய்கை, தேயிலைத் தோட்டம் இரப்பர்த்தோட்டம் என்று பணப்பயிரான காலம்

பிரயாணத்துக்கான செலவுக்காகவும் கங்காணியிடம் ஆரம்பத்தில் கடன் வாங்க நேர்ந்தது. இவ்வாறு தமிழகத்தை விட்டுப் புறப்படும்போதே இவர்கள் பெரிய கங்காணிக்குக் கடன்காரராயினர்! இந்த மீளாக் கடன் அவர்களைச் சுரண்டும் ஆயுதமாகப் பெரிய கங்காணியால் பயன்படுத்தப்பட்டது. இத்துடன், தோட்டத்தில் வேலைக்குச் சென்ற பிறகு திருமணம், ஈமச்சடங்கு, பூப்பெய்தும் வைபவங்கள் எனப் பல காரணங்களுக்காக இத்தொழிலாளர்கள் மீண்டும் மீண்டும் பெரிய கங்காணியிடம் கடன் வாங்கினர். இதைவிட, கங்காணிக்குச் சொந்தமான மளிகைக் கடைகள், பெட்டிக் கடைகள் தோட்டத்தில் இருந்தன. அந்தக் கடையில்தான், அவர் கூறும் விலைக்குத்தான் பொருட்களை வாங்கவேண்டும். இந்தக் கடனும் பழைய கடனுடன் சேர்ந்து மிகப் பெரிய சுமையை இவர்கள் தோளில் ஏற்றியது.

இத்துடன் தோட்டத்துரையிடமிருந்து தனது தொழிலாளர் கோஷ்டிக்குரிய மொத்த சம்பளத்தையும், பெரிய கங்காணிதான் வாங்குவார். பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட சாதியினரையே இவ்வாறு கூலி வேலைக்கு அழைத்துச் சென்றிருந்தால், அவர்களது கல்வி அறிவின்மையைப் பயன்படுத்தி, வெள்ளைக் கம்பளி வாங்கிய கணக்கு, கருப்புக் கம்பளி வாங்கிய கணக்கு என்று கள்ளக்கணக்கு எழுதி அவர்களது சம்பளப் பணம் முழுவதையும், தன்னிடம் வாங்கிய கடனுக்கு அசலும் வட்டியுமாக வரவு வைத்துக் கொள்ளுவார். இதனால் சம்பளப் பணத்தைத் தொழிலாளர்களில் பெரும்பாலோர் கண்ணிலேயே காணாமல், வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இப்படிப்பட்ட இழிந்த வாழ்க்கை, இவர்களுக்கு அளிக்கப்பட்ட முன்வினைப் பயன் என்று தங்களையே சமாதானம் செய்து கொண்டு இயந்திரமாக வாழ்க்கையில் தங்களைப் பிணைத்துக் கொண்டனர்.தோட்டத்தில் வேலை செய்யும்போது வேலைப் பளுவும், வாழ்க்கைச் சுமையும் தெரியாமல் இருக்க இவர்களுக்குத் தெரிந்த ஒரே வழி மதுபானமும், மனதை நெகிழ வைக்கும் பாட்டுக்களும்தான்.

இவர்கள் துயரங்களில் இருந்து தப்பிக்க விரும்பினாலும், இந்தியாவிற்குத் திரும்பிச் செல்ல நினைத்தாலும், சட்டமோ, கங்காணியோ, துரைமாரோ ஒருபோதும் இதை அனுமதிக்க மாட்டார்கள்... மலையக மக்களின் இன்னல்களைக் கண்டு, இந்தியா மற்றும் பல்வேறு நாடுகளில் உள்ள மனிதாபிமான இயக்கங்களும், தனி நபர்களும் எதிர்ப்புக் குரல் கொடுத்தனர். இதன் விளைவாக 1912-இல் மருத்துவ வசதிச் சட்டமும், 1920-இல் கல்விக்கான சட்டமும், 1921-இல் தொழிற் சட்டமும், 1927-இல் சம்பளச் சட்டமும் இலங்கை அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்டன. மலையக மக்கள் இலங்கை மண்ணில் நிலைபெறத் துவங்கிய பிறகு, தங்களது அடிப்படைப் பிரச்னைகளுக்காகப் போராடவும், அதற்கான தொழிற்சங்கங்களை அமைக்கவும் தொடங்கினர்.

ஆரம்ப நாட்களில் மலையக மக்கள் மத்தியில் தொழிற்சங்க இயக்கத்தைத் தோற்றுவித்தவர் நடேச அய்யர் ஆவார். இவர் ஒரு பத்திரிகையாளர். இவரும், ஏ.இ. குணசிங்காவும் தொழிலாளர் சங்கத்தின் முன்னோடிகளாவார்கள் தோட்டப் பகுதிகளில் தொழிற்சங்கங்கள் அமைக்கப்படுவதைத் தோட்ட துரைமார்கள் கொடிய முறையில் நசுக்கினர். இருப்பினும் லங்கா சமசமாஜக் கட்சி அகில இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தைப் பதிவு செய்தது.

இலங்கை சுதந்திரம் அடைந்த பிறகும், அதற்கு முந்தைய காலக் கட்டத்திலும்



நடைபெற்ற பொதுத் தேர்தல்களில், மலையக மக்களின் கணிசமான வாக்குகள் இடதுசாரியினரைப் பெருமளவில் தேர்தலில் வெற்றி பெறச் செய்தது. இதன் காரணமாக வெறுப்பும், ஆத்திரமும் அடைந்த டி.எஸ். சேனநாயக்கா மனித உரிமைகளைக் குழிதோண்டிப் புதைக்கும் இலங்கை பிரஜா உரிமைச் சட்டம், இந்தியர் பாகிஸ்தானியர் பிரஜா உரிமைச் சட்டம் மற்றும் தேர்தல் திருத்தச் சட்டம் ஆகிய மூன்று சட்டங்களை நிறைவேற்ற முனைந்தார்.

எந்த நாட்டிலும் இல்லாத அளவு கடுமையான முறையில் பிரஜா உரிமைச் சட்டம் இலங்கையில் கொண்டு வரப்பட்டது. இக் கொடிய சட்டத்தின்படி, சட்ட விரோதமாகக்குடியேறியவர்களாக மலையகத்தமிழர் கருதப்பட்டனர்.

இலங்கையில் பிறந்த ஒருவர், தான் இலங்கைப் பிரஜை என்ற தகுதியைப் பெறுவதற்குத் தனது தந்தை, அல்லது தந்தைவழிப் பாட்டன் இலங்கையில் பிறந்ததற்கான ஆதாரத்தைக் காட்டி நிரூபிக்க வேண்டும். அப்படி இல்லாவிட்டால் தந்தைவழி முப்பாட்டன் இலங்கையில் பிறந்ததற்கான சான்றைக் காட்டவேண்டும். இதற்கான சிறப்பு அத்தாட்சியாக பிறப்புச் சான்றிதழ் கருதப்பட்டது. உண்மையில் இது நடைமுறையில் சாத்தியமில்லாத ஒன்று. காரணம், பிறப்பைப் பதிவு செய்யும் முறை கட்டாயமாக்கப் பட்டது 1895-ஆம் ஆண்டுக்குப் பிறகுதான். அதற்கு முன் பிறந்தவர்களைப் பதிவு செய்திருக்க வாய்ப்பு இல்லை.

இடதுசாரித் தலைவர்களில் ஒருவரான பீட்டர் கெனமன், ““இந்தச் சட்டத்தில் கோரப்படும் சான்றுகளின் அடிப்படையில் பார்க்கப் போனால், மதிப்பிற்குரிய பிரதமர் டி.எஸ்.சேனநாயக்க கூட இலங்கைப் பிரஜையாக முடியாது. ஏனெனில் அவரது தந்தை இலங்கையில் பிறந்ததற்கான சான்றை அவரால் கூட சமர்ப்பிக்க முடியாது“ எனக் குறிப்பிட்டார். இருப்பினும் இச்சட்டம் நிறைவேற்றப்பட்டது.

அடுத்து 1949-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தேர்தல் திருத்தச் சட்டம் பிரஜா உரிமை இல்லாதவர்களுக்கு வாக்குரிமை கிடையாது என்று மறுத்ததன் மூலம் மலைகத் தமிழர்கள் தங்களது வாக்குரிமையை இழந்தனர். இதன் மூலம் மலையக மக்கள் இரண்டாம் தர குடிமக்களாக இழிவு செய்யப்படும் நிலை ஏற்பட்டது. இதனால் தமிழர்கள் தம் பலத்தை இழந்தனர். இந்த மசோதாவை ஜி ஜி பொன்னம்பலம் ஆதரித்தது வேதனையே

---





# ஆசிரியர் நவநிதி சுப்பிரமணியம் அவர்களின் 10 வது நினைவு அஞ்சலி

குரும்பசிட்டி பொன் பரமானந்தர் வித்தியாலயத்தின் முன்னாள் ஆசிரியரும், வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் அமரர் மு.க.சுப்பிரமணியம் (வெற்றிமணி ஸ்தாபகர்) அவர்களின் அன்பு மனைவியுமான நவநிதி சுப்பிரமணியம் அவர்களின் (எமது அம்மாவின்) 10 வது ஆண்டு நினைவு அஞ்சலி இன்றா-கும்.(03.10.2023.)

அன்னை, தந்தை இருவரும் ஆசிரிய பணியில் இருந்து ஆயிரக்கணக்கான மாணவர்களை உயர்நிலைக்கு உயர்த்தியவர்கள். அவர்கள் இன்று சிறப்பாக வாழ்வது கண்டு நாமும் மகிழ்கிறோம். மேலும் எமது தந்தையார் மாணவர்கள் வளர்ச்சிக்காக ஆசிரிபணிக்கு ஈடாக வெற்றிமணி மாணவர் சஞ்சிகையை உருவாக்கி, பல படைப்பாளிகளை உருவாக்கியவர். இப்பணிக்கு அம்மாவின் துணை அளப்பரியது. அம்மாவின் ஆதரவு இல்லாமல் ஒரு மாணவர் சஞ்சிகையை சிறப்பாக வெளியிட்டு இருக்கமுடியாது.

இன்றும் அவர்கள் நல்லாசியே வெற்றிமணி பத்திரிகையை யேர்மனியில் 29 வருடங்களாக வெளிவர வரமாக அமைந்தது எனலாம்.

எம்மைச் சுமந்து வந்த முத்துப்பேழை எம் அம்மா. 10 ஆண்டுகள் மறைந்தாலும் நம் நினைவுள்ள வரை வாழ்வார்கள்.

என்றும் நீங்காத நினைவுடன்

மகள் கலாநிதி. லோகதாசன்,மகன். திரு.சு.சிவகுமாரன்,திரு.சு.சிவராஜன்,மகள் திருமதி.தயாநிதி மோகன்,திருமதி பதுமநிதி அன்பழகன். மருமக்கள் திரு.த.மோகன், திரு.த.அன்பழகன், திருமதி.ஜெயபவானி. சிவகுமாரன், திருமதி வாணி. சிவராஜன்

விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.









எத்தனை கோடி இன்பம் வைத்தாய் 31

கலாசூரி தீவ்யா சுஜேன் (இலங்கை)

# பார் மீது நான் சாகாதிருப்பேன் காண்பீர்

**பார்** மீது நான் சாகாதிருப்பேன் காண்பீர் எனத் தமிழ் விரும்பிகள் நெஞ்சத்தில் நித்தம் உறைந்திருக்கும் பிரபஞ்ச கவிஞன் பாரதியின் நினைவு மாதத்தில், அவரது கொள்ளுப் பெயரன் கலாநிதி ராஜ்குமார் பாரதி அவர்கள் இலங்கைக்கு வருகை தந்தமையைப் பெரும் கொண்டாட்டமாக மாற்றினர் இலங்கை பாரதி பக்தர்கள்.

பாரதி வழித்தோன்றல்களோடு கலைப் பாலம் அமைக்க ஆர்வத்தோடு செயல்படும் இலங்கை பாரதி விரும்பிகள் பலருளர். அதில் அபிநயக்ஷேத்திரா பெரும் பங்கினை வகுக்கிறது.

இம்முறையும் அபிநயக்ஷேத்திராவின் அழைப்பில் ராஜ்குமார் பாரதி ஐயா இலங்கைக்கு வருகை தந்தார். அபிநயக்ஷேத்திராவின் இரு பெரும் அரங்கேற்றங்களாக இலங்கைத் திருநாட்டினை கருப்பொருளாகக் கொண்டு "தொன்மாவிலங்கை" அரங்கேற்றமும், பெண்ணின் பெருமையாய் விளங்கிய நாயகியரை அடிப்படையாகக் கொண்டு " நாயகி " அரங்கேற்றமும் கொழும்பில் இடம்பெற்றது. இவ்விரு நடனத்தயாரிப்புகளுக்கும் இசை அமைத்துப் பெருமை சேர்த்ததோடு மட்டுமல்லாமல் முதன்மை விருந்தினராகவும் வருகை தந்து சிறப்பித்தார்.

இந்நிகழ்வுகள் முறையே 02.09.23 கொழும்பு புதிய கதிரேசன் மண்டபத்திலும், 09.09.23 பிஷொப்ஸ் கல்லூரி மண்டபத்திலும் இடம்பெற்றது. இவ்விரண்டு அரங்கேற்றத்திலுமாக மொத்தம் பன்னிரண்டு புதிய நடன உருப்படிகளுக்கு ராஜ்குமார் பாரதி ஐயா இசை அமைத்து வழங்கியதோடு சில பாடல்களுக்கு இயலாக்கமும், ஜதி அமைப்பும் வழங்கி இருந்தார். இவை அனைத்துமே காலத்தின் தேவை கருதி படைக்கப்பட்ட காலங்கடந்து உயிர்ப் பெற்றிருக்கவல்ல உருப்படிகள். மிக நுண்ணிய விடயங்கள் கொட்டிக்கிடக்கும் முத்தமிழ் முத்துக்கள் இவை.

இவ்விரு அரங்கேற்றங்களையும் தவிர, அபிநயக்ஷேத்திராவின் ஒழுங்கமைப்பில் செப்டம்பர் 10 ஆம் திகதி பிஷொப்ஸ் கல்லூரி மண்டபத்தில் சுவிஸ்லாந்து நடன ஆசிரியர் திருமதி வாணி சர்மாவின் மாணவி கேதாரணி ரத்தினகுமாரின் அரங்கேற்றம் இடம்பெற்றது. இவ்வரங்கேற்றத்திலும் அபிநயக்ஷேத்திராவின் உருப்படிகள் சேர்க்கப்பட்டிருந்தன. பாரதியின் நினைவு நாளை ஒட்டியதாக இந்த அரங்கேற்றம் நிகழ்ந்தமையால் பாரதியின் புதிய ஆத்திச்சூடி, முப்பெரும் தேவிகள், " தேம துர தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" என்ற பாரதி கவி வரிகளை கொண்டமைந்த தில்லானா என்பன இடம்பெற்றன. அந்த உருப்படிகளும் ராஜ்குமார் பாரதி ஐயாவின் இசை அமைப்பில் அமைந்தவை. அவரது சிறப்பு வருகையும் கேதாரணியின் அரங்கேற்றத்திற்கு பெருமை சேர்த்தது.

அபிநயக்ஷேத்திரா நிகழ்வுகள் தவிர இன்னும் இரண்டு முக்கிய நிகழ்வுகள் ராஜ்குமார் பாரதி ஐயா வருகையினால் இலங்கையில் இடம்பெற்றது. ஒன்று, மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற பாரதி விழா.

நிறுவகத்தின் இயக்குனர் பேராசிரியர் பாரதி கென்னடி அவர்களின் பல வருட விண்ணப்பத்தில் இம்முறை ராஜ்குமார் பாரதி ஐயா அவர்கள் மட்டக்களப்பு சென்றார். கலாநிதி பாரதி கென்னடி அவர்களின் மிகச் சிறந்த ஏற்பாட்டில் கிழக்கு பல்கலைக்கழக வேந்தர், துணை வேந்தர் முன்னிலையில் பல்கலைக்கழக மாணவர்களின் கலை நிகழ்வுகளோடு அரங்கு முழுவது பாரதி ஒளி பரவி இருந்தது. சுவாமி விபுலானந்தர் உருவச் சிலைக்கு பாரதி ஐயா மாலை அணிவித்து விழாவினை ஆரம்பித்து வைத்ததோடு , நிறைவில் சுவாமி விபுலானந்தரால் கையாளப்பட்ட பழமை வாய்ந்த யாழ் ஒன்றினையும் நிறுவகத்திற்கு முன்னதான பிரதான வீதியில் திறந்து வைத்தார்.

தொடர்ந்து மட்டக்களப்பு மாவட்ட செயலாளரின் தலைமையில், மாவட்ட செயலகத்தில் ஐயாவிற்கான கௌரவ வரவேற்பு நிகழ்வு இடம்பெற்றது.

வணக்கத்திற்குரிய சுவாமி ஸ்ரீமத் நீலமாதவானந்தாஜி மஹராஜ் அவர்கள் சுவாமி விபுலானந்தருக்கு பாரதி மீதிருந்த எல்லையற்ற விருப்பினை தெரிவித்ததோடு , இந்தியாவில் ராமகிருஷ்ண மிஷன்களில் ராஜ்குமார் பாரதி ஐயா அவர்கள் வழங்கிய இசை கச்சேரிகளையும் நினைவு கூர்ந்து மதிய விருந்துக்கு அழைத்துச் சிறப்பு ஆசிகளை வழங்கி மகிழ்ந்தார்.

இரண்டாவதாக யாழ்ப்பாணம் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஏற்பாட்டில் நடைபெற்ற ராஜ்குமார் பாரதி ஐயாவிற்கான கௌரவ விழா.

நிறுவகத்தின் அதிபர் உயர்திரு லலீசன் அவர்களின் தலைமையில் செப்டெம்பர் 7 ஆம் திகதி கலாசாலையில் அமைந்துள்ள வீரமணி ஐயா கலையரங்கில் இந்நிகழ்வு நடைபெற்றது. அதில் இலங்கையில் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த ஆசிரிய மாணவர்களும், ஆசிரியர் கலாசாலை நிருவாகத்தினரும் , விரிவுரையாளர்களும் கலந்து சிறப்பித்தனர். இந்நிகழ்வில் ராஜ்குமார் பாரதி ஐயா அவர்கள் உரையாற்றும் போது பல பாரதி பாடல்களைப் பாடி , இயற்தமிழும் , இசை தமிழும் கலந்த நிகழ்வாக மாற்றி அனைவர்க்கும் அன்பு செய்தார்.

இவை தவிர , பல பணிகளுக்கு மத்தியிலும் அன்பின் நிமித்தம் பாரதி நினைவு நாளை ஒட்டி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கும், வீரகேசரி பத்திரிகைக்கும் நேர்காணலை வழங்கி, தம் வாழ்த்துக்களையும் அன்பினையும் நன்றியையும் இலங்கை மக்களுக்கு தெரிவித்தார். மொத்தத்தில் செப்டம்பர் 2023 ராஜ்குமார் பாரதி ஐயாவின் இலங்கை வருகை ஒரு வரலாற்றுப் பதிவாக அமைந்துவிட்டது.

லிவர்ப்பூல் தமிழ்க்கல்விக்கூடம்
Liverpool Tamil Kalvikkoodam
EST: 2014

தமிழ் எங்கள்
உயிரின் இருப்பு

லிவர்ப்பூல் தமிழ்க்கல்விக்கூடம்
Liverpool Tamil Kalvikkoodam

Opening Time;
Saturday's between 1:30 PM and 5 PM.

Telefon: 07723 957543

THE DE LA SALLE ACADEMY, Carr Ln E, Croxteth , Liverpool L11 4SG, UK


ADS BESTFOODS
Sri lankan Indian Grocery Shop
DELIVERY
24
HOURS
ADS
BESTFOODS
Pillsbury
CHAKKI FRESH ATTA
AASHIRVAAD
MULTIGRAINS
TATA
TATA sampann
HIGH PROTEIN
madhur
BIRYANI SPECIAL
MTR
3 MINUTE BREAKFAST
Haldiram's
BHUJIA
Catch
Table Salt
HAJMOLA
Honey
Himalaya
Rheinische Str 79-81 44137 Dortmund.
Tel: 0231 950 468 83 / 017645956273




புலம் பெயர்ந்த தமிழர்கள் சிந்தனைக்கு...

செங்கதிர்

# ஆனையிறவு உப்பளம்

புலம்பெயர்ந்த தமிழர்கள் ஈழத்தில் முதலீடுகளை செய்யும் போது இவை பற்றியும் சிந்தனை செய்யலாம்.

தமிழர் தாயகத்தின் ஒரு முக்கிய வளம் எப்படி தமிழர் கரங்களை விட்டுச் சென்று கொண்டிருக்கின்றது என்பதற்கு 'ஆனை யிறவு உப்பளம்' மற்றொரு உதாரணம்.

ஒரு காலத்தில் இலங்கை முழுவதற் குமான உப்புத் தேவையைப் பூர்த்தி செய்துவந்த ஒரு உப்பளம், பல்வேறு இரசாயனப்பொருட்களும், இரசாயன மூலப்பொருட்களும் உருவாகக் காரண மாக இருந்த அந்த உப்பளம், இன்று மட்டுப்படுத்தப்பட்ட அளவுக்கான செயற் பாட்டுடன் முடங்கிக் கிடக்கின்றதைப் பார்க்கின்ற போது ஒவ்வொரு தமிழ் மகனினதும் மனங்கள் வலிக்கத்தான் செய்யும்.

### காரணம் என்ன தெரியுமா?

முதலாவது காரணம் அனைவரும் அறிந்த ஒரு காரணம் தான்.

மாற்றாந்தாய் மனப்பாண்மையுடன் அரசாங்கம் இந்த உப்பளத்தை அணு குவது. இரண்டாவது, உப்பளத்தில் பணியாற்ற இளைஞர்கள் முன்வராத காரணம்.

### பெரும்போக உப்பு அறுவடையாகிறது

ஆனையிறவு உப்பளத்தில் உப்பு அறு வடை ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற் றுக் கொண்டிருக்கின்றது.

இப்போது உப்பு பெரும்போக கால மாகும். கடந்த சில தினங்களாக மழை யினால் தாமதமான உப்பு அறுவடை துரிதமாக நடைபெறுவதாகவும், ஆனை யிறவில் உற்பத்தியாகும் உப்புக்கள் உள் ளூர் தேவைகளுக்கு பயன்படுவதாக உப்பள முகாமையாளர் தெரிவித்தார்.

என்ன வளம் இல்லை எங்கள் நாட்டில். ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்? கேள்வி கேட்டுவிட தோன்றுகிறது.

பெருவளங்களில் ஒன்றாகிய கடல் வளத்தைக் கொண்டு உப்பும் அது சார்ந்த உற்பத்திகளும் பயன்பாடும் பெரும் வரமே!

### வீதியோரத்திலும் உப்பு பிஞ்சாகிறது

ஆனையிறவு A9 வீதியின் 265 KM கல்லடியில் வீதிக்கும் தொடருந்து பாதைக்கும் இடையில் தேங்கிய கடல் நீர் கடும் வெப்பத்தினால் உப்பாகிக் கொண்டிருக்கிறது.

'பிஞ்சுப்பூ' என்ற பதநிலையில் உப்பு பூத்துக்கொண்டிருக்கின்றது. சில தினங் களில் விளைந்து பாறையாகிவிடும்.

ஆனையிறவு உப்பளத்தில் விளைந்த உப்புக்களை வெட்டி உப்புமனை இடும் இவ்வேளையில் வீதியோரத்தில் தேங் கிய கடல் நீர் உப்பாகி வருகிறது.

ஒரு சில சென்டிமீட்டர் உயரம் வரை உப்பு பாளங்கள் தோன்றுவதை அவதா னிக்கலாம். இந்த உப்புக்கான கடல்நீர்





உப்பளத்தின் ஈற்றுப் பாத்தி நிரம்பிய போது வழிந்து வெளியேறிய நீரால் பூத்து காய்க்கிறது.

எனினும் இந்த சிறுதேக்க உப்புப் பாளங்கள் உணவுப் பயன்பாட்டுக்கு பொருத்தமானதாக இருக்காது.

### உப்பு உடைக்கும் தொழிற்சாலை வசதியில்லை

கிளாலி கடல் நீரேரி யில் இருந்து நீரைப் பெற்று நிகழும் ஆனையிறவு உப்பள உப்பு உற்பத்தியின் செயன் முறையினை அங்கு பணியாற்றும் தொழில் மேற்பார்வையாளர் இடம் கேட்டபோது புரிந்து கொள்ளுமளவில் விளக்கினார்.

இப்போது சோடியம் குளோரைட் மட்டுமே உற்பத்தியாவதாகவும் அதுவும் புத்தளம் உப்புத்தொழிற்சாலைக்கே சுத்திகரிப்பதற்காகவும் உடைத்து பொதி யிடுவதற்காகவும் கொண்டு செல்லப்ப டுகின்றது.

ஆனையிறவில் விளையும் உப்பே இலங்கையில் தரமான நல்ல உப்பு ஆகும். ஆயினும் அதனை உடைத்து பொதியிடும் தொழிற்சாலை வசதி ஆனையிறவில் இல்லை எனவும் கூறி யிருந்தார். எதிர்காலத்தில் இத் தொழிற் சாலை வசதி ஆனையிறவிற்கு கிடைக்க உரிய தரப்பினர் நடவடிக்கை எடுப்பது வரவேற்கத்தக்கது.

### வேலையாட்கள் பற்றாக்குறை

ஆனையிறவு உப்பளத்தில் நூற்றைம் பது ஊழியர்கள் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர்.

சிலர் ஆறு வருடங்களுக்கு மேலாகவும் பணியில் உள்ளனர். சிலர் சில நாட்கள் வேலையின் பின் பணிவிலகி விடுகின் றனர் எனவும் இருநூறு பணியாளர் கள் தேவையென மற்றொரு வேலை மேற்பார்வை அதிகாரி கூறினார்.

உப்பளம் மேலும் அபிவிருத்திய டைந்து பாத்திகள் அதிகரிப்பதால் வேலையாட்கள் இன்னும் அதிகமாக இனிவரும் காலங்களில் தேவைப்படு வார்கள் என்றார். பணியில் உள்ள ஊழி யர்கள் அறுவடைகாலங்களில் உப்பு அறுவடையின் ஈடுபடுவதும் ஏனைய காலங்களில் உப்பு ஏற்றும் பணியிலும் ஈடுபடுகின்றனர். பாலின வேறுபாடின்றி ஊழியர்கள் உப்பளத்தில் பணியாற்றுவ தைக் காணலாம்.

### உப்பு உற்பத்தி செயன்முறை

உப்பளங்களில் பாத்திப் படிமுறைகளி னூடாக கடல் நீரில் உள்ள மனித உண வுத் தேவைக்கு பொருத்தமில்லாத உப் புக்கள் கழிவாக வடிக்கப்பட்டுகின்றன.

17 ஆம் பக்கம் பார்க்க...



விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.





சேவியர்
(தமிழ்நாடு)

நடுப்பக்கம்

# கோடிகளின் போட்டியில் ஏழைகள்

சினிமா எனும் மாய வலை காலம் காலமாக மனிதனுடைய ரசனைக் கால்களை இறுக்கிக் கட்டிக் கொண்டு தான் பயணிக்கிறது. திரையின் நிழல்களில் தங்களுடைய வாழ்வின் நிஜங்களை மறக்கவும், மீட்டெடுக்கவும் மக்கள் திரைப்படங்களை வரவேற்கிறார்கள். தங்களால் செய்ய முடியாததைத் தங்கள் ஹீரோ செய்யும் போது, அதன் மூலமாக தானும் அந்த சாதனையைச் செய்து விட்டதைப் போல ரசிகர்கள் புளகாங்கிதம் அடைகிறார்கள்.

ஆரம்ப காலங்களில் கலையும் கலையும் மோதின. அப்போது காலத்தால் அழிக்க முடியாத பல காவியங்கள் தோன்றின. போட்டி போட்டுக்கொண்டு கலைஞர்கள் நல்ல புதினங்களை, இதிகாசங்களை, வரலாற்று அடையாளங்களைக் காட்சிப்படுத்தினார்கள். அது பார்வையாளர்களைப் பரவசப்படுத்தியது. தாங்கள் கண்டிராய மாய உலகிற்குள் பயணிக்கவும், தாங்கள் அறிந்து கொள்ள விரும்பிய இதிகாசப் பதிவுகளுக்குள் உலவவும் சினிமாக்கள் உதவின.

கலைகள் மோதிய போது போட்டி ஆரோக்கியமாய் இருந்தது. பல கதாநாயகர்கள் திரையில் உயிர்பெற்று உலவினார்கள். விடுதலைப் போராட்ட வீரர்கள், சமூகப் போராளிகள், சமயக் கதாநாயகர்கள் என பலரும் திரைகளில் ஆளுமை செய்தார்கள். காலம் செல்லச் செல்ல கலைகளும் கலைகளும் மோதிக் கொள்வதை சற்றே ஒதுக்கி வைத்து விட்டன.

அதன்பின் கலைஞர்களும், கலைஞர்களும் மோத ஆரம்பித்தனர். கதாநாயகர்களுக்கான போட்டி அங்கே உதயமானது. எந்தக் கதாநாயகனுக்கு பாடத் தெரிகிறது, ஆடத் தெரிகிறது, நடிக்கத் தெரிகிறது, சண்டையிடத் தெரிகிறது என்றெல்லாம் போட்டிகள் ஆரம்பமாயின. அதுவரை கலைகளை விமர்சித்து வந்த விமர்சகர்கள், பின்னர் கதாநாயகர்களை விமர்சிக்கத் தொடங்கினார்கள்.

யார் பெரியவன் எனும் போட்டி உருவானது. எந்தப் படம் என்பதை விட, யாருடைய படம் என்பதை நோக்கி போட்டி திசை திரும்பியது. காலங்கள் தோறும் பல கதாநாயகர்களும் கதாநாயகிகளும் தோன்றினார்கள். ரசிகர்கள் தங்கள் பிரியத்துக்குரிய கதாநாயகனை பல்லக்கில் வைத்தார்கள், எதிர் நாயகனை பள்ளத்தாக்கில் போட்டார்கள்.

ஒரு திரைப்படம் ஐந்து திரையரங்குகள், ஐம்பது திரையரங்குகள் என வெளியாகின. நூறு திரைகளில் ஒரு படம் வெளியானால் அது உலக அதிசயமாய்ச் சிலாகிக்கப்பட்டது. ஐம்பது நாட்கள், நூறு நாட்கள், வெள்ளி விழாக்கள் என திரைப்படங்கள் சாதித்தன. ரசிகர்கள் அந்த போஸ்டர்களையும், பத்திரிகைச் செய்திகளையும் வெட்டி வெட்டிப் பாதுகாத்துப் புளகாங்கிதம் அடைந்தார்கள்.

இன்றைக்கு அந்தப் போட்டிகளெல்லாம் பாக்ஸ் ஆபீஸ் ஹிட் ! எனும் ஒற்றை இலக்கில் வந்து நிற்கிறது. ஒரு திரைப்படம் கலைத்தன்மையோடு இருக்கிறதா, கலையை மேன்மைப்படுத்துகிறதா, மனித நேயத்தை மையப்படுத்துகிறதா என்பதெல்லாம் இரண்டாம் பட்சமாகிவிட்டது. ஒரு படம் வசூலில் நூறு கோடியைத் தாண்டிவிட்டதா,



ஐநூறு கோடியைத் தாண்டிவிட்டதா, ஆயிரம் கோடியைத் தொட்டு விட்டதா என்பதே கேள்வி !

விமர்சகர்களும் இன்றைக்கு சார்பு நிலையில் நின்று பேசுகின்றனர். ஒரு திரைப்படத்தை வீழ்த்த வேண்டும் எனும் நோக்கத்தில் எல்லாவற்றையும் நெகடிவ் கண்கொண்டு பார்ப்பவர்கள் சிலர், இல்லாததையும் ஊதிப் பெருதாக்கி வெற்றி பெற வைக்கவேண்டுமென பேசுபவர்கள் சிலர். இவர்களுக்கெல்லாம் இரகசிய வருவாய் பல இடங்களிலிருந்தும் வருவது திரைத்துறைக்குத் தெரிந்தே இருக்கிறது.

சமூக வலைத்தளங்களின் ஆளுமையினால் இன்றைக்கு ஒரு திரைப்படம் சரியில்லை என்றால் அது இரண்டாம் நாளைக் கூட கடக்க முடியாமல் நொண்டியடிக்கும். முன்பெல்லாம் ஒரு திரைப்படம் வெளியாகி, அதன் விமர்சனம் பத்திரிகையில் வருவதற்கே குறைந்த பட்சம் ஒரு வாரம் பிடிக்கும். அதுவரை திரைப்படத்தைக் கணிசமான மக்கள் பார்த்து விடுவார்கள். ஆனால் இன்று அப்படியல்ல. படம் வெளியான அடுத்த நிமிடத்திலிருந்தே, டுவிட்டர் விமர்சனங்கள், இடைவேளை விமர்சனங்கள், படம் பார்த்து வருவோரின் விமர்சனங்கள் என விமர்சனங்கள் குவிந்து விடும்.

அதனால் ஒரு திரைப்படத்தை வெற்றி பெற வைப்பது என்பது கடினமான விஷயம் எனும் நிலை இன்று உண்டு. அதனால் தான் ஒரு திரைப்படத்தை ஆயிரம் திரைகள், மூவாயிரம் திரைகள் என வெளியிடுகிறார்கள். இதனால் குறைந்த பட்சம் ஒரு சில நாட்களுக்கான முன்பதிவாவது கிடைக்கும். அதன் மூலம் முதல் வார இறுதியில் கணிசமான வருவாயை ஈட்டி விடலாம் என்பதே கணக்கு. அதே போல இப்போதெல்லாம் பெரும்பாலான பெரிய இந்தியத் திரைப்படங்கள் உலகெங்கும் ஒரே நாளில் வெளியாகி அங்கும் பல கோடி ரூபாய்களைச் சம்பாதித்துக் கொடுக்கிறது. புலம் பெயர்ந்த மக்களின் பணம் திரைத் துறையின் வசம் செல்கிறது.

இதற்கு இன்னொரு காரணம், திரைப்படத் தயாரிப்பு என்பது

17 ஆம் பக்கம் பார்க்க...



# கோடிகளின் போட்டியில் ஏழைகள்

கார்ப்பரேட் நிறுவனங்களின் ஒரு தொழிலாக மாறிப் போனது எனலாம். முன்பெல்லாம் திரைத்துறையோடு இயங்குபவர்கள் மட்டுமே திரைப்படங்களைத் தயாரித்தார்கள்.ஆனால் இப்போது பெரும் பணம் இருப்பவர்கள் திரைப்படங்களைத் தயாரிக்கிறார்கள். அவர்களுக்கு புராஃபிட் மார்ஜின் முக்கியமாகிறது.

அதனால் ஒரு படம் நூறு கோடி என்றால், அடுத்த படம் ஐநூறு கோடி என இலக்கு வைக்கிறார்கள். அப்படிப்பட்ட வெற்றியை எளிதில் ஈட்டி விட முடியாது. அதற்காகத் தான் ரசிகர் படையை வெறியேற்றும் வேலையை திட்டமிட்டே செய்கிறார்கள். எந்த நடிகரின் பாடல் அதிக வியூஸ் போகிறது, அதிக லைக்ஸ் போகிறது என்பது தொடங்கி, எந்த படம் அதிக லாபம் ஈட்டுகிறது என்பது வரை போட்டிகள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன.

கோவணத்தைக் கூட கடன் வாங்கி உடுத்தும் ரசிகனும், தன்னுடைய தலைவன் படம் 500 கோடி ஈட்ட வேண்டும் என்பதை மானப் பிரச்சினையாக எடுத்துக் கொள்கிறான். எப்படியாவது படத்தை வெற்றி பெற வைக்க வேண்டும் என்பதை ரசிகர்கள் தங்களுடைய வாழ்க்கை இலட்சியமாக்கிக் கொள்கிறார்கள். இதன் மூலம் கார்ப்பரேட் நிறுவனங்களும், திரை ஆளுமைகளும் பயனடைகிறார்



கள். போஸ்டர் ஒட்டி, கட்டவுட் வைத்து, பாலாபிஷேகம் செய்யும் ரசிகர்களின் காலம் முடிவடைந்து விட்டது. இப்போதெல்லாம் டிஜிடல் யுத்தம் தான். டிஜிடல் வெளியில் அவர்கள் தங்களைத் தயார்படுத்திக் கொண்டு, திரையரங்குகளுக்கு தங்கள் இரத்தப் பாசனத்தை அளிக்கிறார்கள். அதிகாலையிலேயே திரையரங்க கவுண்டர்களில் காத்துக் கிடந்து டிக்கெட் வாங்கும் நிலையை இன்று, டிக்கெட் ரெசர்வேஷன் சாதிக்கிறது. ஆன்லைனில் ஆரம்பித்த ஐந்து நிமிடங்களில் எல்லாம் விற்றுத் தீர்ந்தது என்பதை சாதனையாகக் கொண்டாடுகிறான் ரசிகன்.

இப்படி தனக்கு எந்த விதத்திலும் லாபம் இல்லாத, தனது நடிகனுக்கும் அவரை வைத்து தொழில் செய்யும் நிறுவனங்களுக்குமாக தனது வாழ்க்கையை அர்ப்பணிக்கிறான் அப்பாவி ரசிகன். அப்படியே அப்பட்டமான அரசியல் நுட்பமே இதிலும் இருக்கிறது. ஒரு சிறு கூட்டத்தின் வளர்ச்சிக்காகவும், ஏக போக வாழ்க்கைக்காகவும் – ஒட்டு மொத்த நாட்டு மக்களும் மந்திரிச்சு விட்டதைப் போல அலையும் காட்சிகளை இங்கும் பொருத்திப் பார்க்கலாம்.

திரைப்படங்கள், கலையின் ஒரு உன்னத அம்சம். எந்த ஒரு விஷயத்தையும் எளிதில் மக்களின் இதயத்தில் இறக்குமதி செய்ய திரைப்படங்களால் கூடும். விடுதலைப் போராட்ட வீரியத்தை மக்களிடம் மாபெரும் எழுச்சியாய்க் கொண்டு சேர்த்ததில் திரைப்படங்களின் பங்கு அலாதியானது. இன்று அது தவறான சித்தாந்தங்களைப் பரப்பவும், வெறுப்பை வளர்க்கவும், அரசியல் இலாபத்துக்காய் பதட்டங்களை உருவாக்கவும் பயன்படுவது மனதை உலுக்குகிறது.

திரைப்படம் எனும் அற்புத வடிவம் மீண்டெழவேண்டும். அதன் இலக்கு என்பது கலை, மனிதம், சமூக மேம்பாடு எனும் நோக்கத்தில் செயல்பட வேண்டும். அதற்கான கமர்ஷியல் அம்சங்களோடு அது சமூகத்தை அழகு செய்ய வேண்டும். வெறுப்பின் வேர்களுக்கு நீர் வார்க்காமல், அன்பின் வேர்களுக்கு ஆதரவாய் இருக்க வேண்டும். அத்தகைய ஒரு மாற்றம் எழ வேண்டுமெனில் ரசிகர்கள் பாக்ஸ் ஆபீஸ் ஹிட் எனும் சிந்தனையை மாற்றி விட்டு, கலை சமூக மாற்றத்தின் கருவி எனும் சிந்தனையோடு திரைப்படங்களை அணுக வேண்டும்.

இப்படிப்பட்ட ஒரு மாபெரும் மாற்றம் நேரும் எனும் கனவை நோக்கியே எனது சிந்தனைகளும் இளைப்பாறுகின்றன. ■



15 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## ஆனையிறவு உப்பளம்

இத்தகைய வடிகட்டல்களின் மூலம் கல்சியம் சல்பேற்று (CaSOt) கல்சியம் காபனேற்று (CaCOP) போன்ற உப்புக்கள் பாத்திகளில் வீழ்படிவாகி பளிங்கு போன்ற பாறைகளாகின்றன.

இறுதியாக உள்ள உப்புப் பத்தியில் மனித உணவுத் தேவைக்கு பெரிதும் பயன்படும் சோடியம் குளோரைட்டு (NaSOt) வீழ்படிவாகிறது.

இப்போது இலங்கையில் கடும் வறட்சி நிலவி வருகின்ற வேளையில் ஆனையிறவு உப்பளத்தில் உப்பு அறுவடை நிகழ்கின்றது.

அறுவடையினால் கிடைக்கும் உப்புக்கள் மனையிடப்பட்டு காடுகளில் வேயப்படும். ஆறுமாதங்களாக மனையிடலில் பேணப்பட்டும். இதனால் வெட்டப்பட்ட சோடியம் குளோரைட்டுடன் கலந்திருந்த மக்னீசியம் குளோரைட்டு (MgCl), மக்னீசியம் சல்பேற்று(MgSOt) போன்ற மக்னீசியம் சேர்வைகள் வழியில் உள்ள நீராவியை உறிஞ்சி நீர்க்கசிவுக்குள்ளாகி உப்புமனையின் அடிப்பகுதிக்கு வீழ்படிவாகிச் சேரும்.

குறைந்தளவு மாசுள்ள சோடியம்குளோரைட்டு (கறிப்புபாகிய சோடியம் குளோரைட்டு சிறிதளவில் மக்னீசியம் குளோரைட்டு போன்ற மக்னீசியம் சேர்வைகளை உள்ளடக்கியிருக்கும்.

இதனாலேயே வெளியில் திறந்து வைக்கும் பொது மேசை உப்பெனவும் அழைக்கப்படும் சோடியம் குளோரைட்டு நீர்க் கரைசலுக்குள்ளாகிறது.

மனிதப் பயன்பாட்டுக் கேற்றவகையில் மாற்றப்பட்டு விற்பனைக்கு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### மூடப்பட்ட பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை

இலங்கையின் ஆனையிறவு உப்பை மூலப்பொருளாக கொண்டு தொழிற்பட்ட இரசாயனத் தொழிற்சாலை தான் பரந்தன் இரசாயனத்தொழிற்சாலையாகும்.

எனினும் இது இப்போது தொழிற்படுவதில்லை.



இந்த பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையில் சோடியம் ஐதரொட்சைட்டு (NaOH), ஐதரோக்குளோரிக்கமிலம் (HCl) போன்ற இரசாயனப்பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டன.

இந்த இரசாயனத் தொழிற்சாலை இல்லாததால் இப்போது கல்சியம் சல்பேற்று போன்ற உப்புக்கள் உற்பத்தி செய்வதில்லை என உப்பள அதிகாரிகளிடம் கேட்ட போது தெரிவித்தனர்.

இதனால் தொலமைற்று, அப்பற்றைற்று, ஜிப்சம் போன்ற இரசானப் பொருட்கள் உற்பத்தி இல்லாது போகின்றது. தமிழர் தாயகப் பகுதியில் உள்ள மூடப்பட்ட பல தொழிற்சாலைகளில் இதுவும் ஒன்று.

ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலையும் காங்கேசன்துறை சீமெந்துச் தொழிற்சாலையும் இவ்வாறு இப்போது தொழிற்பாடற்றுக் கிடக்கின்றன.

சூழல் நேயத் தன்மையோடு இத்தகைய தொழிற்சாலைகள் மீளவும் இயங்கும் போது இலங்கையின் ஏற்றுமதிப் பொருளாதாரம் மேம்படுவதோடு; உள்ளூர் தேவைக்கான இறக்குமதியும் குறையும்.

இழக்கப்படும் அந்நியச் செலாவணியை பெருக்கி வளரும் வளர்ந்த பொருளாதார நாடாக இலங்கை மாறிட உதவும். உள்ளூர் மக்களுக்கான வேலையில்லா நிலைமைகளும் மாற்றியமைக்கப்படும்

புலம்பெயர்ந்த தமிழர்கள் ஈழத்தில் முதலீடுகளை செய்யும் போது இவை பற்றியும் சிந்தனை செய்யலாம். ■






# பக்குவத்திருமணி ஆறுமுக பாஸ்கரக்குருக்களின் மணிவிழா!










படங்கள்: பா.நந்தபாலன்

யேர்மனி காமாட்சி அம்பாள் ஆலய பிரதம குரு பக்குவத்திருமணி ஆறுமுக. பாஸ்கரக்குருக்கள் அவர்களின். மணி விழா நிகழ்வு 16.09.2023 அன்று சிறப்பாக நடைபெற்றது. விழாவில் மணிவிழா சிறப்பு மலர் ஒன்று வெளியிடப்பட்டது.பலரது நல்லாசிகளும்,ஆலயத்தின் பழைய வரலாறு சொல்லும் புகைப்படங்களும் அடங்கியிருந்தன. அன்று வெற்றிமணி பத்திரிகையின் வெளியீடான சிவத்தமிழ் சஞ்சிகை அங்கு வெளியிடப்பெற்றது. அதன் சிறப்பு பிரதிகள் பக்குவத்திருமணி ஆறுமுக.பாஸ்கரக் குருக்கள் அவர்களுக்கும் ஸ்ரீமதி மதிவாணி அம்மாவிற்கும் வழங்கப்பட்டது. அரங்கத்தில் இலவசமாக சிவத்தமிழ் சஞ்சிகை மக்களுக்கு வழங்கப்பட்டது. விழாவில் மணிவிழா நாயகனின் செயல் திறன் பற்றி பலரும் வியந்து உரைத்தனர்.

**படங்கள் தமிழ் எம் டிவி தொலைக்காட்சி யேர்மனி**



# மனிதாபிமான மலிவு

ஐப்பசிக்கு முந்தைய பின்கோடை
வெய்யிலில்
சொட்டு நீர் தேடிக் காத்திருக்கும்
முள்வயல் வரப்பினோரம்
தலைதப்பியிருக்குமோர் அறுகின்
ஈரம் காயாத சிறு வேர் முடிச்சென,
இன்னமும் சுவாசித்துக்
கொண்டிருக்கிறேன்.

உப்புக் காற்றின்
ஈரம் தொட்டு உவனிக்கும்
ஆனையிறவின் உப்பு வயலோரம்
உறங்கிக் கிடக்கும் ஊர்க்
கதைகளென ஊமையாகிக்
கிடக்கிறது
ஆள்காட்டி ஒன்றின் வலிய
கால்கள்.

எப்பொழுதும்
தன் கரிய வாலால்
சேதி சொல்லிப்போகும்
கரிக்குருவியின் நீள் வாலில்
இப்போது இல்லை
வேலியோரப் பூவரசின்
பிரத்தியோக வாசனை.

எல்லாமும்
மாறிவிட்ட காலத்திடம்
கனதிகளுக்கும் ஹா ஹா இடும்
ஒட்டடை மனிதர்களுக்கு
மனிதாபிமானத்தை கற்றுக்கொடு
என்று எத்தனை
காலத்திற்குத்தான்
இறைஞ்சிக் கொள்ள முடியும்?

ஆகவே தாயே !!
அழுவதை நிறுத்திவிடு
அடையாளங்கள் பேசப்பட்டால்
அத்தனைக்குமாக
அன்றைக்கு
அழுது தீர்.

இது மனிதாபிமானம்
புதைக்கப்பட்ட தேசம் !!



**சர்மிலா வினோதினி**


## வெற்றிமணி திருமண சேவை

யேர்மனியில் கற்றிங்கன் நகரில்
ஆசிரியையாக பணிபுரியும் நற்குணம்
உள்ள சைவ, வேளாளர் 28 வயது
நிரம்பிய பெண்ணுக்கு, ஏற்ற
பட்டதாரி மணமகன் தேவை.
தற்போதைய பாடசாலையிலேயே
தொழிலைத் தொடரக் கூடிய
தூரத்தில் வரனை எதிர்பார்க்கிறோம்.
**பெற்றோர் தொடர்பு கொள்ளவும்:**
**4915774318528**



**மணமகன் தேவை!**

Wirtschaftsingenieur
பிறாங்பேட்டில்
வேலை செய்யும் நற்குணமுள்ள
34 வயதுடைய சைவ
வேளாளர் குல பெண்ணுக்கு
தற்போதய இடத்தில் வேலையை
தொடரக்கூடிய பட்டதாரி
மணமகனை எதிர்பார்க்கிறோம்.
**பெற்றோர் தொடர்பு கொள்ளவும்:**
**4915774318528**



விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# இதோ பத்து நிமித்தில் வந்துவிடுவேன்

## தொடர்ச்சியான தாமதத்துக்குப் பின்னால் இருக்கும் அறிவியல்

உங்கள் எல்லோருக்கும் நண்பர்கள் அல்லது குடும்ப உறுப்பினர்கள் இருப்பர், அவர்கள் ஒரு சாதாரண மதிய உணவு தேதி அல்லது ஒரு முக்கியமான வேலைக் கூட்டத்திற்கு வருவதற்கு எப்போதும் தாமதமாகத் தான் வருவார்கள். சொன்ன நேரத்திற்கு வருவது என்றாலே அவர்களுக்கு மிகவும் கடினமாக இருக்கும். அப்படி இருக்கும் அவர்களின் நிரந்தரத் தாமதத்திற்கு என்ன காரணம் என்று எப்போதாவது யோசித்திருக்கிறீர்களா? இதற்கு அறிவியல் என்ன சொல்கிறது என்று பார்ப்போமா?

### மூளையின் பங்கு

சிலர் எப்போதும் தாமதமாக வருவதைப் புரிந்து கொள்ள, நாம் மனித மூளைக்குள் ஒரு புகுந்து வேண்டும். லண்டன் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணிபுரியும் ஹியூகோ ஸ்பைர்ஸ் என்ன சொல்கிறார் என்றால், மூளையில் பயண நேரத்தைக் குறைத்து மதிப்பிடுவதற்குப் பொறுப்பான இயக்கம் ஒன்று இருக்கலாம் என்று. இந்த இயக்கம் ஹிப்போகாம்ப்ஸ் என்று அழைக்கப்படும் மூளையின் ஒரு பகுதியில் உள்ளது, அது நேரம் தொடர்பான தகவல் மற்றும் நிகழ்வுகளின் நினைவுகளைச் செயலாக்குகிறது. இருந்தாலும், சில தனிநபர்கள் தொடர்ந்து நேரத்தைக் குறைத்து மதிப்பிடுவதற்கான சரியான காரணம் மர்மமாகவே உள்ளது.



Dr.நிரோஷன் தில்லைநாதன் (யேர்மனி)

ஒரு சுவாரசியமான கண்டுபிடிப்பு என்னவென்றால், ஓர் இடத்தை நாம் நன்றாகத் தெரிந்திருந்தால் நாம் அவ்விடத்திற்குச்செல்லும்நேரத்தைக்குறைத்து மதிப்பிடுவோம் என்பது தான். நாம் ஒரு பகுதியை மிகவும் நன்கு அறிந்திருந்தால், அங்குச் செல்லும் போது சாத்தியமான சிக்கல்களை நாம் புறக்கணிக்க முனைவோம். இது நமது நேர நுண்ணறிவு மற்றும் நமது சூழலின் சிக்கலான தொடர்புமுறையை உயர்த்தும்.

### நினைவாற்றலின் பங்கு

நேரத்தை மதிப்பிட எங்கள் நினைவாற்றலும் ஒரு முக்கிய பங்கை வகிக்கின்றது. கேம்பெல் பல்கலைக்கழகத்தின் துணைப் பேராசிரியரான எமிலி வால்டும் விளக்குவது போல், எங்கள் நேர மதிப்பீடுகள் பெரும்பாலும் நாம் கடந்த காலத்தில் ஒத்த பணிகளைச் செய்யும் போது சேமித்த அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டவை ஆகும். இருந்தாலும், எங்கள் நினைவுகள் மற்றும் கருத்துக்கள் துல்லியமாக இருக்காது. உதாரணமாக, இசை போன்ற சுற்றுச்சூழல் காரணிகள் நேர உணர்வைச் சிதைக்கலாம். வால்டமின் ஆய்வு, பின்னணியில் இயங்கும் பாடல்களின் எண்ணிக்கை மற்றும் நீளம் ஆகியவற்றால் நமது நேர மதிப்பீடுகள் பாதிக்கப்படலாம் என்பதைக் காட்டுகிறது. இதன் பொருள் நமது சுற்றுப்புறங்கள் கூட நமது நேர நுண்ணறிவைப் பாதிக்கலாம்.

### சுற்றுச்சூழல் காரணிகள்

நெரிசல் என்பது நமது தாமதத்திற்குக் காரணமாக இருக்கும் மற்றொரு சுற்றுச்சூழல் காரணியாகும். 2022ம் ஆண்டு புனரமைக்கப்பட்ட சப்வே பயணங்கள் பற்றிய ஓர் ஆய்வில், நெரிசலான பயணங்கள் நீண்டதாக உணர்ந்தன, இது நேரம் மெதுவாகச் செல்வதற்கான கருத்தை ஊக்குவித்தது. இத்தகைய விரும்பத்தகாத அனுபவங்கள் தாமதத்திற்கு வழிவகுக்கலாம்.

### ஆளுமை பண்புகள்

குறைந்த சிக்கனம், உதாரணமாக, மக்கள் திட்டமிட்ட பணிகளை மறக்கச் செய்யலாம், இதனால்தாமதங்கள் ஏற்படலாம். கூடுதலாக, கவனம் செலுத்தும் வளங்களின் பற்றாக் குறையால் பணிகளை ஒரே நேரத்தில் செய்ய முயலும் திட்டமிட்ட நேரத்தில் பணிகளை முடிக்கப் போராடக்கூடும்.



### தாமதத்தின் உளவியல்

"Late! A Timebender's guide to why we are late and how we can change, " என்ற புத்தகத்தின் ஆசிரியரான கிரேஸ் பாசி, சில தாமதக்காரர்கள் தாங்கள் எப்போதும் தாமதமாக இருப்பதைக் கூட உணரவில்லை என்று சுட்டிக்காட்டுகிறார். அவர்களால் தங்களையும் மற்றவர்களையும் தாங்கள் நேரத்திற்கு எல்லாமே செய்பவர்கள் என்று நம்ப வைக்க முடியும், ஆனால் அதற்கு அவர்களுக்கு ஒவ்வொரு வேலைக்கும் னுநயனடைநெள தேவைப் படுகிறது. அதாவது ஒவ்வொரு விஷயத்திற்கும் ஒரு முடிவு நேரம் தேவைப் படும். கவனக்குறைவுக் குறைபாடு அதாவது hyperactivity கோளாறு (ADHD) சில தனிநபர்களுக்கு நேரத்தைச் செயலாக்கவும் மதிப்பிடவும் கஷ்டத்தைக் கொடுக்கும்.

### தாமதத்தை உடைப்பது

சரி, இனி எவ்வாறு நாம் நேரத்திற்கு அனைத்து விஷயத்தையும் செய்யலாம்? அதற்கு நீங்கள் உங்கள் தொலைப்பேசியில் அலாரம்கள் மற்றும் நினைவூட்டல்களை அமைக்கலாம். மேலும் நீங்கள் நேரத்திற்குப் போக இருக்கும் ஒரு விஷயத்துக்கு முன்பு இன்னும் ஒரு செயலை நேரத்திற்குச் செய்ய முயலுங்கள். இதுவும் உங்களுக்கும் மிகவும் உதவலாம்.

தாமதம் என்பது பல்வேறு காரணிகளால் பாதிக்கப்படும் ஒரு சிக்கலான நிகழ்வு ஆகும், குறிப்பாக மூளை இயக்கங்கள், நினைவாற்றல், ஆளுமைப் பண்புகள் மற்றும் சுற்றுச்சூழல் காரணிகள் அதில் அடங்கும். இந்த அம்சங்களைப் புரிந்து கொள்வது தனிநபர்கள் தங்கள் Punctuality ஐ மேம்படுத்தவும் தங்கள் நண்பர்கள் மற்றும் அன்புக்குரியவர்களை ஏமாற்றாமல் தடுக்கவும் உதவும்.



நீண்டகாலம் மக்கள் மனதில் நம்பிக்கை ஒளி பரப்பும் தங்க நகையகம்

# Jaffna Bazar Jewellery




தங்க நகைகள் என்றால் தங்கள் மனதில் நிலைத்து இருப்பவர்கள் நாங்கள் என்றும் நாடுகள்

2023 ஆம் ஆண்டின் அதி உன்னத புத்தம் புது டிசைன்கள் எமது கையிருப்பில்



பொன்னுருக்கு, காதுகுத்து வைபவங்களுக்கு எம்மை அழையுங்கள்

திருத்த வேலைகள் குறுகிய காலத்துள் செய்து தரப்படும்.



ஆலயங்களுக்கு தேவையான பூஜை பொருட்கள் எம்மிடம் நிறைவாக உண்டு

உங்கள் இலத்தற்கு தேவையான மளிகைப் பொருட்கள் என்றும் போல் மலிவு விலையில் கிடைக்கும்

பசுமையான மரக்கறி வகைகள்
கடல் உணவு வகைகள்
அனைத்தும் எம்மிடம் தரமாக
மலிவாகக்கிடைக்கும்

Jaffna Bazar

Jaffna Bazar, Kaiser Straße.49 ,
69329 Frankfurt Main

Tel: 069 25 62 6353 \ 0049 69 25626353
0049 179 4792961 \ 0049 151 71520425




# இலக்கியத்தில் இவர்கள்... 38

கௌசி (யேர்மனி)

## LGBTQ
## ஒன்றாக வாழ்கின்றார்கள் ஒன்றாகவா வாழ்கின்றார்கள்





கட்டுப்பாடு, விட்டுக் கொடுப்பு இவற்றை ஒட்டியே மனித வாழ்க்கை குடும்பம் என்ற அமைப்புடன் ஓடிக்கொண்டிருக்கின்றது. இவற்றை மனதில் கொள்ளாத உணர்வுகளே இன்று பேசுபொருளாக இருக்கின்றன. ஆண்பால், பெண்பால், பலர்பால் என்ற உயர்திணைப் பாலினம். இப்போது பாலினமே இல்லை. மனிதர் என்ற இனம் மட்டுமே உள்ளது எனக் கொண்டாடப்படுகின்றது. உறுப்புக்களை மட்டும் வைத்துக்கொண்டு ஆண், பெண் என்று பிரிக்கக் கூடாது என்பதே அவர்கள் வாதமாக இருக்கிறது. இங்கு ஒருமுறை என்ற வார்த்தை இந்த வாழ்க்கை என்பதற்குள் அடங்கி விடுகிறது. எம்முடைய மனத்துக்கு எது சரி, எது தோன்றுகிறதோ அதன்படி வாழ்வோம் என்று வாழுகின்ற பண்பு தற்கால இளம் தலைமுறையினரிடம் தோன்றியுள்ளது. சட்டம் போட்டுக் கட்டுப்படுத்தி வைக்கின்ற போது ஒரு பலூனை ஒரு பக்கம் அழுத்துகின்ற போது மறுபக்கம் அது தள்ளிக் கொண்டு வரும். அதுபோலத் தான் ஒரு பக்கம் கட்டுப்படுத்துகின்ற போது அது மறுபக்கம் வேறுவிதமான குற்றங்களாக மாறுகின்றன.

இப்போது LGBTQ என்பதை அடிக்கடி நாங்கள் காதுகளால் கேட்டுக் கொண்டிருக்கின்றோம். Rainbow society என்று ஒவ்வொரு நாடுகளிலும் ஒன்றுகூடலும் விழாக்களும் நடத்தப்படுகின்றன. இது இன்று நேற்று தோன்றியது என்று நாம் எண்ணி விடமுடியாது. தற்காலத்தில் ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் சட்டரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டு வெளிப்படையாக சமூக வலைத்தளங்களில் வெளியாகின்ற காரணத்தால், எல்லோராலும் நேரடியாக உலகத்தின் மூலைமுடுக்கெங்கும் அறியக்கூடியதாக இருப்பதனால் LGBTQ என்பது பலராலும் அறியக்கூடியதாக இருக்கின்றது. நான் இது பற்றிச் சரி, பிழை என்றெல்லாம் வாதிடும் நிலையில் இல்லை.

இயற்கையாக ஏற்படும் மனித உணர்வுகளை அடக்கி வைப்பதை விடுத்து அந்த உணர்வுகளுடனேயே மனிதர்களை வாழ விடுகின்ற போது அவன் வாழுகின்ற ஒரு வாழ்க்கை மகிழ்ச்சியாக அமைகின்றது. உலக உயிர்கள் அனைத்தும் காதல் அல்லது காமத்துக்குள்ளேதான் அடங்கிக் கிடக்கின்றன. காமம் இல்லாது குடும்பமும் இல்லை. உலக மக்களும் இல்லை. இந்தக் காமத்தை ஒரு வரையறைக்குள் கொண்டு வருவதற்காகவே திருமணம் என்ற நடைமுறை ஏற்படுத்தப்பட்டது. இதனை உடைத்தெறியும் இயக்கமாக இந்த LGBTQ உருவாகியுள்ளது. எல்லோரும் இந்த பாலின மாற்றத்துக்குள் உற்படுகின்றார்களா? என்றால், இல்லை. ஆண், பெண் என்னும் குடும்ப அமைப்புக்குள் தம்முடைய வாழ்க்கையைக் கொண்டு செல்கின்ற மனிதர்கள் இல்லாமல் இல்லை.

**இவற்றை ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.**

### L என்றால் Lesbian:

பெண்ணும் பெண்ணும் காதல் கொள்வது, காமம் கொள்வது Lesbian எனப்படுகின்றது. கி.மு 610 ஆம் ஆண்டு பிறந்து கி.மு. 580 ஆண்டு இறந்த சஃப்போ Sappho என்ற கிரேக்கப் பெண் கவிஞரே இந்தப் பெயர் வருவதற்குக் காரணமாவார். இவர் பிறந்த இடம் Lesbian எனப்படும் ஒரு தீவு. இவர் தன்னுடைய மன உணர்வுகளைக் கவிதைகளாக எழுதுவார். இவரைச் சுற்றிப் பெண்கள் கூட்டம் எப்போதும் இருந்தது. நண்பர்கள், குடும்பம் பற்றியே இவருடைய கவிதைகள் அமைந்திருந்தன. இக்கவிதைகளை ஆதாரமாகக் கொண்டு சாஃப்போ பெண்களுடன் ஓரினச் சேர்க்கை வாழ்வை அனுபவித்தவர் என்று பிற்காலத்து விமர்சகர்கள் எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். இவ்வாறு வாழ்கின்ற மக்கள் லெஸ்பியன் தீவுப் பெண்களைப் போன்றவர்கள் என்றும் கூறியதுடன் பெண்களே பெண்களை காம நோக்கத்துடன் அணுகினால், அவர்களை லெஸ்பியன் என்ற பெயரை வைத்து அழைக்கத் தொடங்கினார்கள்.

**லீனா மணிமேகலையின் எட்டாவது**
**அகத்திணைக் கவிதைகளில்**
**அந்தரக் கன்னியின் குரலாக வரும்**
**மின்னும் நாக்கு என்னும் இக்கவிதை**
**உப்பும் பனியும் மின்னும் நாக்கால்**
**ஸாப்போவின் – கவிதையொன்றை**
**உயிருந்தப் பாதையில் பாய்ச்சி**

**என்னிலிருந்து**
**சூறையாற்றைப் பிரித்தெடுக்கும் உனக்கு**
**முப்பத்து மூன்று சிவந்த இதயங்களைப்**
**பரிசாகத் தருகிறேன்**
**என் ஆலிவ் இலை விரல்**
**அழுத்தங்களில்**
**தோல் வெள்ளியாய் காய்கிறது**
**உதிரும் மயிரையெல்லாம் வேட்கையில்**
**மிச்சமில்லாமல் தின்கிறேன்**
**மன்மதனைப் பலியிட்ட நாளில்**
**பறை முழங்குகிறது**
**நீயும் ரதி நானும் ரதி**

கவிஞர் மாலினி ஜீவரெத்தினம் எழுதிய

**பேரழகே அழைத்தாயே காதலினாலே**
**திளைத்தேனே.**
**நிலைக்கண்ணாடி போல**
**எனை முழுதாக்கிக் காட்டும்.**

**அழகாக்கிடும் உயிர் நீதான்**
**ஒரு தேவதையைப் போலே**
**உயிர் பத்தி எரியுதே பாதகத்தி உன்னால**
**இது தொலையாத உறவு என்று ஊர்**
**சொல்லிப் போகும்**
**உன்னைத் தொடர்ந்தே வருவேனே கடல்**
**தாண்டி வாடி**
**என் உடல் தீண்டிப் போடி**

**இதேபோல் மருதநில**
**குறுந்தொகைப் பாடல் ஒன்றிலே**

**தச்சன் செய்த சிறுமா வையம்**
**ஊர்ந்தின் புறாஅ ராயினுங் கையின்**
**ஈர்த்தின் புறூஉ மிளையோர்**
**உற்றின் புறேெ மாயினு நற்றேர்ப்**
**பொய்கை யூரன் கேண்மை**
**செய்தின் புற்றனெஞ்**
**செறிந்தன வளையே.**

பெரியோர் இழுக்கின்ற பெரிய தேரை இளையோர் இழுத்து இன்பம் அனுபவிக்காது விடினும் அந்தத் தேரை நினைந்துச் செய்த சிறுதேரை இழுத்து, அப்பெரியவர்கள் அடையும் இன்பத்தைப் பெறுவதுபோல, பரத்தையர் பெறும் மெய்யுறு புணர்ச்சியைப் பெற்று இன்பமடையமாட்டோம் ஆனாலும், தலைவனை நினைந்து உள்ளத்தே நட்பைப் பெருக்குதலினால் அவர் பெற்ற இன்பத்தையே யாம் பெற்றேம் என்று கூறுகின்றார். இங்கு தலைவியும் தோழியும் அடையும் இன்பம் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு பெண்ணுக்கும் பெண்ணுக்கும் இடையேயான காம உணர்வுகளை பெண்கள் கவிதைகளாக வடித்திருக்கின்றார்கள்.

28 ஆம் பக்கம் பார்க்க...







விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



கவிஞர் வ வடிவழகையன் (இலங்கை)

# திமிறி எழுவதில் தான் தில்!

தாம்பூலம் தரித்தவாய்க்கு
சாம்பார் ருசிக்காது
சீனிமென்ற நாக்கிற்கோ
தேனீர் இனிக்காது
உன்வாழ்வும் இதுபோல்தான்...
இன்பங்கள் தொடரானால்
இவ்வாழ்க்கை
இனிக்காது
துன்பங்கள் தொடர்ந்தாலும்
துயர்தானே
வாழ்வென்பாய்
எதிரிகள்..., ஏமாற்றம்.., ஏக்கங்கள்...,
இவையெல்லாம்
எதிரிடையே வந்தால்தான்
உலகம் வரமாகும்
அதிரும் நடுக்கங்கள்...
அலைக்கழிக்கும்
பேரலைகள்
புதிராய் வருகையில்தான்
புடம்போடப் படுவாய்நீ
நம்பிக்கைத் துரோகத்தை நேரில்
அறிகையில்தான்
நல்லவரைத் தேர்ந்தணுகும்
நுண்ணறிவுன்
வசமாகும்

பம்மாத்து.., பரிகாசம்.., பசப்பு..
இவையெல்லாம்
சும்மா இருப்பவரால் பிரித்தறிதல்
இயலாது
முதுகில் குத்துகிற இழிமனிதப்
பிறவிகளை
மூன்றடிகள் முன்னேறி
திரும்பிப்பார் மூக்குடைவார்
கம்மாலை உலைவாயில்
காய்ச்சி அடித்தாலே
நம்மளுக்கு கத்தியொன்று
கையில் கிடைக்கிறது
மண்ணோடு திமிறித்தான்
விதைகள் மரமாகும்
விண்ணோடு திமிறித்தான்
விமானங்கள் எழுகிறது
காத்துள்ள பந்தொன்றை கடலில்
அமுக்கிப்பார்!
"தோத்துப்போய் விடேன்"என்று
அதுதிமிறி எழுந்துவரும்
நீயும் இதைக்கொஞ்சம் நெஞ்சில்
நிறுத்திக்கொள்!
பாயும் புலியாகிப் போய்சேரும்
இடஞ்சேர்வாய்!

# இலங்கையில் இயக்குனர், நடிகை, கவிஞர் நவயுகாவின் கவிதை தோகுப்பு வெளியீடு







கடந்த மாதம் கொழும்பில் நவயுகா குகராஜா அவர்களின் சூர்ப்பனகையும் ஒரு பவளத்தீவும் என்ற கவிதை நூல் வெளியீட்டு விழா இடம் பெற்றது. அது இடம் பெற்ற இடம் சிறப்பானது.

ஒரு நூலகத்தில், புத்தகங்களின் பின் னணியில் அழகான இரு கதிரைகளில் இருந்து நூல் பற்றி பேசுவதும், பார்வையா ளர்கள், நூலகத்தில் இருந்து அவதானிப் பதையும் காண முடிந்தது. பின்னணியில் பெரும் பதாதைகள் ஏதும் சுவரில் இல்லை. ஒரு சித்திரம் வரையும் ஸ்ராண்டில் சூர்ப்பன கையும் ஒரு பவளத்தீவும் புத்தகத்தின் படம் பெரிதாக வைக்கப்பட்டு இருந்தது. அவ்வளவு தான்.

நவயுகா இலங்கையில் ஒரு முன்னணி தமிழ் திரைப்பட இயக்குநர் நடிகை. அதனால் காட்சிப்படுத்தல் கைவந்த கலை என்பது தெரிகிறது.

நன்றி. படங்கள் நாடி



# கவியரங்குக்கோர் கந்தவனம்

## கவிஞரை வெற்றிமணியும் வாழ்த்தி மகிழ்கின்றது

**இயல்வாணன்**

கவியரங்குக்கோர் கந்தவனம் என இரசிகமணி கனகசெந்திநாதனால் சிறப்பிக்கப்படுமளவுக்கு ஒரு காலத்தில் சந்தெவெழில் தவழும் கவிதைகளால் அரங்கை அதிர வைத்தவர் கவிஞர் வி.கந்தவனம். கவிஞராக, பாடநூல் எழுத்தாளராக, நடிகராக, பல்துறை அறிஞராக, பேச்சாளராக, சமயச் சொற்பொழிவாளராக, கல்வியியலாளராக, சிறுவர் இலக்கியகர்த்தாவாக பல நிலைகளில் கலை இலக்கியத்துக்கும் சமூகத்துக்கும் பெருந் தொண்டாற்றியவராக அவர் விளங்குகின்றார்.



28-10-1933 அன்று நுணாவில் மேற்கு, சாவகச்சேரியில் பிறந்த விநாயகர் கந்தவனம் தனது ஆரம்பக் கல்வியை நுணாவில் மேற்கு கணேச வித்தியாசாலையிலும் (இன்று நுணாவில் மேற்கு அ.த.க.பாடசாலை – மூடப்பட்டுள்ளது) இடைநிலைக் கல்வியை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியிலும் நிறைவு செய்தார்.

சிரேஷ்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் (எஸ்.எஸ்.சி) சித்தியடைந்த அவர் ஓராண்டு டிறிபேக் கல்லூரியில் எழுதுவினைஞராகக் கடமை புரிந்தார். இக்காலத்தில் வடமாநில ஓவியப் பரிசோதகர் கனகசபையிடம் ஓவியமும், சங்கீத பூஷணம் நடேசனிடம் சங்கீதமும் பயின்றார்.

பின்னர் சென்னை கிறிஸ்துவக் கல்லூரியிலும், கோவை அரசினர் கலைக்கல்லூரியிலும் தனது மேற்கல்வியைத் தொடர்ந்தார். சென்னை பல்கலைக்கழகத்தில் இளங்கலைமாணி பட்டத்தைப் பெற்றுக் கொண்டார்.

1958ஆம் ஆண்டு ஆசிரியர் பணியில் இணைந்து கொண்ட அவர் 6 ஆண்டுகள் மாத்தளை சென்.தோமஸ் கல்லூரியில் கற்பித்து, இடமாற்றம் பெற்று வந்து வயாவிளான் மத்திய கல்லூரியில் கற்பித்தார். குரும்பசிட்டி அவர் திருமண பந்தத்தால் புகுந்த இடமாயிற்று.

கல்வி அமைச்சின் பாடநூற் சபையில் பணியாற்றியதுடன் அரச புவியியல் பாடநூல் எழுத்தாளர் குழுவில் ஒருவராகக் கடமையாற்றினார். புவியியல் பாடத் துணைநூல்களையும்(1970) எழுதினார். 1973ஆம் ஆண்டு அதிபர் நியமனம் பெற்று முல்லைத்தீவு மாவட்டத்தின் யோகபுரம் மகாவித்தியாலயத்தில் பணியாற்றினார். ஆசிரிய ஆலோசகராகவும் கடமை புரிந்தார். பின்னர் அளவெட்டி அருணோதயக் கல்லூரியிலும் சிறிது காலம் அதிபராகக் கடமையாற்றினார்.

கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலையில் பகுதிநேர விரிவுரையாளராகவும் பணிபுரிந்தார். இந்தக் காலங்களில் பட்டப்பின் கல்வி டிப்புளோமா தகைமையைப் பெற்றார். இலங்கையில் க.பொ.த. உயர்தரத்தில் நாடகவியல் ஒரு பாடமாக ஆரம்பிக்கப்பட்டபோது தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு இலங்கைப் பல்கலைக்கழக கொழும்பு வளாகத்தில் நாடக டிப்புளோமா பயிற்சி வழங்கப்பட்டது. அதில் இவர் பங்குபற்றிச் சிறப்புச் சித்தியடைந்ததுடன் வடபுலத்தில் முதன்முதலில் (வயாவிளான் மத்தியகல்லூரியில்) நாடக பாடத்தைக் கற்பித்த ஆசிரியராக இவர் விளங்கினார்.

அத்துடன் நாடக பாட ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பயிற்றுவிக்கும் வளவாளராகவும் விளங்கினார். உயர் ஆங்கில டிப்புளோமா படிப்பையும் நிறைவு செய்து சான்றிதழைப் பெற்றுக் கொண்டார். இவ்வாறு எல்லாத் துறைகளிலும் ஆழ்ந்தகன்று கற்ற அறிவும், அனுபவமும் அவரை ஒரு அறிஞனாகவே ஆக்கியது. 1980ஆம் ஆண்டு தென் ஆபிரிக்காவுக்கு கற்பித்தல் பணிக்காகப் பயணமான அவர் அந்நாட்டின் டிரான்ஸ்கி பிராந்தியத்தில் (நெல்சன் மண்டெலா பிறந்த இடம்) புனித கத்பேட்ஸ் உயர் பாடசாலையில் மானிடவியல்துறைத் தலைவராகக் கடமையாற்றினார். 1988ஆம் ஆண்டு கனடாவுக்குச் சென்ற அவர் இன்று வரை அங்கு வாழ்ந்து வருகிறார்.




1948ஆம் ஆண்டு தனது 15வது வயதில் ஈழகேசரியின் சிறுவர் பகுதியில் 'ஒரு கால் மூன்று தலை' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையுடன் இவர் இலக்கிய உலகுக்குள் நுழைந்தார். 1952இல் ஈழகேசரி பொதுநலவாய பொருட்காட்சி தொடர்பில் நடத்திய கட்டுரைப் போட்டியில் முதற்பரிசைப் பெற்றுக் கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. 1954ஆம் ஆண்டு இவரது முதலாவது நூலான 'ஒன்றரை ரூபாய்' குறுநாவல் வெளிவந்தது. இதனை கவிநாயகன் என்ற புனைபெயரில் எழுதினார்.

பல்வேறு துறைசார்ந்து 50ற்கு மேற்பட்ட நூல்களை அவர் எழுதியுள்ளார். வித்தியானந்தமாலை, அரும்பு,பூச்சரம், தேவைக்கேற்ற திருமுறைத் திரட்டு உள்ளிட்ட பல நூல்களைத் தொகுத்துள்ளார்.

கீரிமலையினிலே குறுங்காவியம்(1969), பாடுமனமே கவிதைகள் (1972), இலக்கிய உலகம் கவிதைகள்(1964), ஏனிந்தப் பெருமூச்சு கவிதைகள் (1965), கூனியின் சாதனை கட்டுரை (1966), நுணாவிலூர் இடவரலாறு(1971), உய்யும் வழி அரங்கக் கவிதைகள்(1972), கவியரங்கில் கந்தவனம்(1972), நல்லூர் நாற்பது(1971), முறிகண்டிப் பத்து, குரும்பசிட்டி விநாயகர் பத்து, பரீட்சையில் சித்தியடைவ தெப்படி? (1972),இலங்கையில், ஆசிரியத் தொழில்(1977),விநாயகப்பா பக்திப் பனுவல்(1993), ஒன்றுபட்டால் நாட்டிய நாடகம்(1994), மணிக்கவிகள்(1994), இயற்கைத்தமிழ்(1995), எழுத்தாளர்(1995), முத்தான தொண்டர்(1995), புதிய சைவ வினாவிடை (1997),தங்கம்மா நான்மணிமாலை (1997), பத்துப்பாட்டு(1998), ஆறுமுகம் (1998),

12 Short stories (1998) Lasting Lights(1998), சிவ புராண தத்துவம்(1998), கனடாவில் சைவசமயம்(2000), அது வேறுவிதமான காதல்(2001), சிவவழிபாடு (2002),கந்தன் கதை(2002), கனடா (2002), வரிக்கவிகள்(2002), தமிழ்க் கவிதை மரபு (2005), பொங்குதமிழ் (2005), ஆன்மீகக் கவிதைகள்(2007), பாவாரம் (2007), கவிநாயகம் வாழ்வும் வரலாறும் வானொலி தொடர் நேர்காணல்(2009) முதலான நூல்கள் குறிப்பிடத்தக்கன. ஆலயங்கள் பலவற்றுக்கும் – குறிப்பாக கொல்லங்கிராய் விநாயகருக்கு பல சிறுநூல்களை எழுதியுள்ளதுடன் சிறுவருக்கான சமயக் கதை நூல்களையும்(கந்தனும் ஔவையாரும், விநாயகப்பெருமானும் அகத்தியரும்) எழுதியுள்ளார். இவ்வாறு தமிழன்னைக்கு மகுடம் சூடும் பல படைப்புகள் மூலம் தனது பல்துறை ஆளுமையை வெளிக்காட்டியுள்ளார்.



யாழ்.இலக்கிய வட்டத்தை உருவாக்குவதில் முக்கிய பங்காற்றிய கவிஞர் கந்தவனம் எட்டு ஆண்டுகள் அதன் தலைவராகவும் கடமையாற்றினார். தான் வாழ்ந்த, பணியாற்றிய இடங்களில் இலக்கிய மன்றங்களை உருவாக்கியுள்ளார். கவிமணி, மதுரகவி, இலக்கிய வித்தகர், சைவ துரந்தரர் முதலான 20ற்கும் மேற்பட்ட பட்டங்கள் வழங்கி தமிழுலகம் இவரைக் கௌரவித்துள்ளது. தனது ஆழ்ந்தகன்ற அறிவால் தமிழிலக்கியத்துக்கு வளஞ்சேர்த்த கவிஞர் வி.கந்தவனம் 90 அகவையில் கனடாவில் வசித்து வருகிறார். தமிழுக்கு அணி செய்யும் கவிஞரை நாமும் வாழ்த்துவோம்.பி.கு.கவிஞர் வெற்றிமணியில் 50 வருடங்களுக்கு மேலாக எழுதிவருபவர்.சிவத்தமிழ் சஞ்சிகையின் கௌரவ ஆசிரியரும் கூட.






# முல்லை பொன் புத்திசிகாமணியின் சொல்லோவியம் 'சின்னாச்சி மாமி'





கொள்ளை எழில் கொஞ்சும் முல்லை மாவட்ட மக்களை மனக்கண்ணால் காண வைக்கும் "சின்னாச்சி மாமி" தலைநகர் கொழும்பு உட்பட பல பகுதிகளுக்கு நீர் உற்பத்திகளை அனுப்பக்கூடிய செழிப்பான கடல்வளம், சின்ன வெண்காயம், உறைப்பான மிளகாய், எங்கும் எப்போதும் சுவைக்கக்கூடிய நிலக்கடலை, தரமான கூரை ஓடுளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் உள்ள மாவட்டமாகிய முல்லைத்தீவில். வற்றாப்பளை அம்மன் ஆலய திருவிழாக் காலத்தில் விளக்கு கொழுந்து விட்டு எரியக்கூடிய அற்புதமான நீரையும் நந்திக் கடலிலிருந்து பெற்றனர். இலங்கையில் போராட்டம் சிறிது சிறிதாக அதிகரித்துச் சென்ற போது பலர் வவுனியா கிளிநொச்சி மாவட்ட கரையோரங்களிலும் முல்லைத் தீவிலும் குடியேறத்தொடங்கினர்.

பயங்கரமான போராட்டத்தால் சொத்துகளையும் உயிரையும் இழக்க நேரிடலாம் என அஞ்சியோர் முன்பின் பழக்கமில்லாத நாடுகளுக்கும் புலம் சிதறத்தொடங்கினார்கள். பொன். புத்திசிகாமணி தான் பிறந்த முல்லை மண்ணையும் அங்கு வாழும் மக்களையும் இடைவிடாமல் நேசித்து கொண்டிருக்கிறர் என்பதை அண்மையில் "ஜீவநதி" வெளியீடாக வந்த நூலில் உள்ள "சின்னாச்சி மாமி"–"பூமணி மாமி"–"சங்கு அக்கா"–வேட்டையும் வேடிக்கையும்"–"அம்மா உன்னை நினைத்து" ஆகிய கதைகளில் காணக்கூடியதாக இருக்கிறது.அதே வேளை புலம் பெயர்ந்து வாழும் ஜேர்மன் தேசத்தின் நடவடிக்கைகளையும் அவதானிக்கிறார் என்பதையும் "தாய்மை ஒருவரம்"–"துணை இழத்தல்"–"ஈர்ப்பு" ஆகிய மூன்று கதைகளாலும் அறிய முடிகிறது.

புலம் சிதறி வாழ்பவர்களில் சிலர் ஊர் மண்ணையும் உறவுகளையும் மறவாமல் சந்தர்ப்பங்ளை வரவழைத்து, ஊரைப்பற்றி உறவுளைப்பற்றி விசாரித்து தம்மால் முடிந்த உதவிகளைச்செய்கிறார்கள்.

முல்லைத்தீவில் தமிழ் மக்களோடு முஸ்லிம் மக்களும் மிகநெருக்கமாக பழகி வந்தார்கள் என்பதால் முஸ்லிம் மக்களும் புத்திசிகாமணியின் கதைகளில் முக்கிய இடத்தை பெறுகிறார்கள். தமிழர்களும் முஸ்லிம்களும் சேர்ந்து உறவாடி சந்தோஷமாக கழித்த காலங்கள் சில நினைவுக்கு வருகிறது சந்தோசமான கதைகள் மாத்திரமில்லாமல் சங்கடமான கதைகளையும் இந்த நூலில் பார்க்கலாம் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்த சம்பவங்களும் பதிவாகியுள்ளது குழப்ப நிலையில் குடும்பங்களாக பிற நாடுகளுக்கு சென்ற பலரையும் இவரது பதிவுகளில் காண முடிகிறது.





உடுவை
எஸ்.தில்லைநடராசா

எங்குசென்றாலும் மறக்கமுடியாத இடங்ளை– மக்களை– நிகழ்வுளை நினைவூட்டும் சொல்லோவியமான "சின்னாச்சி மாமி"யில் முல்லை மக்களின் உணவு முறையும் சற்று வித்தியாசமானது தான். விருந்தினர் என்று யாரும் வந்துவிட்டால் நேர காலம் பார்க்காது நள்ளிரவானாலும் அவர்களை நன்கு உபசரித்து அனுப்புவார்கள். அது மட்டுமல்ல ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வகையில் காலை முதல் மாலை வரை தொழில் செய்து அதன் மூலம் பெறும் வருமானத்தை கொண்டு வாழ்க்கை நடத்துவதையும் காணலாம் அவர் கதைகளில் காணலாம்.

சில கதைகள் இன்னும் நினைவில் நிலைத்து நிற்கின்றன குறிப்பாக "தேரோடும் வீதி" சற்று வித்தியாசமான கதை. காட்டுப்பக்கம் தனியாகச் சென்ற இளம்பெண் ஒருத்தியின் காதல் கதை. காட்டில் அழகான ஆண் ஒருவனை சந்திக்கின்றாள். ஆணும் பெண்ணும் இரவு வேளைகளில் தனியாக இருந்தாலும் ஒருவரை ஒருவர் விரும்பிய போதும் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் இருவரும் தவறாக நடக்காத ஒரு கதை. சாதாரணமாக இந்த நாட்களில் சந்தர்ப்பத்தை தவறாகப் பயன் படுத்தி உறவு ஏற்படுத்துவதைக் காணலாம். புத்தியின் கதையில்அப்படி எதுவும் இல்லை என்பது குறிப்பிடக் கூடியது.

அந்த நாட்களில் கொழும்பிலிருந்து முல்லைத்தீவு போக வேண்டுமானால் யாழ்ப்பாணம் போகும் புகையிரத்ததில் புறப்பட்டு மாங்குளம் அல்லது பரந்தனில் இறங்கி பஸ்ஸில் போவது பற்றியும் எழுதியுள்ளார். முல்லை மக்கள் முகம் கொடுத்த பிரச்சினைகள்– போர்கால சிக்கல்கள்–குண்டு வீச்சுகளால் அவலப்பட்டு சிதறியோடிய சம்பவங்களும் சித்தரிக்கப் பட்டுள்ளது. உறவுகளுடனும் இனத்துடனும் சேர்ந்து வாழ முடியாத நிலை, கொடுமை கொடூரம், இறப்புகள், இழப்புகள், கவலை, கண்ணீர், என உண்மைச் சம்பவங்களை அப்படியே மனத்திரையில் காட்டத்தக்க வகையில் தனித்துவமான கதைகளாக படைத்துள்ளார்.எதிர்கால சந்ததியினர் அறிந்து கொள்ள வேண்டிய பல நிகழ்வுகளும் இந் நூலில் பதிவாகியுள்ளது.

# 33 வருட ஆசிரிய சேவையைப் பாராட்டிக் கௌரவித்த டோட்முண்ட் தமிழாலயம்



கடந்த 09.09.23அன்று, ஆசிரியர் தமிழ்மணி நகுலா சிவநாதன் அவர்களின் 33 வருட கல்விப் பணியையும், கற்பித்தல் சேவையையும் பாராட்டி, யேர்மனியில் டோட்முண்ட் பாடசாலை நிர்வாகம், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் இணைந்து மலர்க் கொத்துகள் கொடுத்து. கௌரவித்தார்கள்.

ஒவ்வொரு ஆசிரியர்களும், ஆசிரியர் நகுலா சிவநாதனின் கற்றல் செயற்பாடு, சமூகப்பணி விளையாட்டுத்துறை போன்றவற்றில் சிறப்பாக ஆற்றும் பணிகளைப் பற்றி பாராட்டிப் பேசினர். அற்றைய நாள் அனைவருக்கும் மதியபோசனம் வழங்கி, அதன்பின் நகுலா சிவநாதனின் ஏற்புரையுடன் விழா இனிது நிறைவு பெற்றது.

**வெற்றிமணியின் வாழ்த்துகள்**










# முதல் சம்பளம்



அ.முத்துலிங்கம்

வாழ்நாள் ஆசை என்று ஒவ்வொருவருக்கும் ஒன்று இருக்கும். என்னுடைய ஆசை கனடாவில் ஒரு நாளாவது வேலை செய்வது. சம்பளத்துக்கு வேலை. என்ன வேலை என்றாலும் பரவாயில்லை. உடல் உழைப்பாக இருக்க வேண்டும். தோட்ட வேலை. கோப்பை கழுவும் வேலை, இப்படி. மூளை உபயோகிக்கும் வேலை மட்டும் வேண்டாம்.

எல்லா முயற்சிகளும் தோல்வியிலேயே முடிந்தன. இப்படி நான் சோர்ந்துபோய் இருந்த சமயம்தான் ஒரு நாள் அதிகாலை டெலிபோன் மணி அடித்தது. பழக்கமில்லாத ஒருத்தர் தமிழ் ஆங்கில மொழிபெயர்ப்புக்கு வரமுடியுமா என்று கேட்டார். எப்போது? இன்றைக்கு. எத்தனை மணிக்கு? காலை 9 மணிக்கு. என்ன இடம்? அவர் முகவரியை சொல்லச் சொல்ல எழுதினேன். மூளையை பாவிக்கத் தேவையில்லை. என்னுடைய வாய் 'சரி வருகிறேன்' என்று சொல்லிவிட்டது.

நான் சந்தித்தவர் ஒரு யூதப் பெண்மணி. பெயர் எமூனா. அவர் உடையும், இருந்த தோரணையும், பேசிய விதமும் எனக்குப் பிடித்துக்கொண்டது. கருணையானவர் என்று மனதில் பட்டது. காப்புறுதி நிறுவனம் சார்பில், விபத்தில் மாட்டிய ஒரு தமிழ் பெண்மணியின் உடல், மன நிலையை அவர் மதிப்பீடு செய்யவேண்டும். இவருடைய மதிப்பீட்டின் அளவுகோல் படி அந்தப் பெண்ணுக்கு இழப்பீடு வழங்கப் படும் என்று எமூனா என்னிடம் சொன்னார்.

விபத்தில் மாட்டிய பெண்ணின் பெயர் சின்னநாயகி. பெரியநாயகி கேள்விப் பட்டிருக்கிறேன். சின்னநாயகி புதிதாக இருந்தது. அவர் ஒரு திருமண விழாவுக்கு சென்றபோது விபத்து நடந்தது. மூன்று நாள் மருத்துவமனையில் நினைவு தப்பிக் கிடந்தார். உடம்பில் பல இடங்களில் முறிவு. தலையில் பலமான அடி. காரில் பயணம் செய்த மற்றவர்கள் சிறிய காயங்களுடன் தப்பிவிட்டனர். ஒருமாத காலமாக இவருக்கு சிகிச்சை நடந்தது. இப்பொழுது வீட்டிலிருந்து சிறிது சிறிதாக தேறி வருகிறார். சின்னநாயகி கட்டையாக உருண்டையாக இருந்தார். தும்மல் ஆரம்பிப்பது போல முகம் கோணலாக இருந்தது. யாழ்ப்பாணத்தில் தமிழ் ஆசிரியையாக வேலை செய்து புலம்பெயர்ந்தவர். அவருக்கு கணவரும் ஒரு மகனும்.

நான் தயாராக இருந்தேன். எமூனா ஆரம்பித்தார், நான் மொழிபெயர்த்தேன்.

இன்று எப்படி உடம்பு இருக்கிறது?

வலிதான். வலியில்லாத ஒரு நிமிடத்தைக் கூட நான் அனுபவித்தது கிடையாது.

இரவு தூங்கினீர்களா?

நித்திரை மாத்திரை போட்டுவிட்டு படுத்தேன். மூன்று மணி நேரம் தூங்கினேன். பின்னர் எழும்பி இன்னொரு வலி மாத்திரை போட்டேன். சிறிது நடந்தேன். சுடுதண்ணீர் வைத்துக் குடித்தேன். தூங்க முடியவில்லை.

உங்களுக்கு சொல்லித்தந்த உடல் பயிற்சிகளை செய்கிறீர்களா?

பயிற்சி செய்தால் வலி இன்னும் கூடுகிறதே. ஏதோ கொஞ்சம் ஏலக்கூடியதை செய்கிறேன்.



கல்யாணவீடு, பிறந்தநாள் கொண்டாட்டம் இப்படியான நிகழ்வுகளுக்கு போகிறீர்களா? அப்படிப் போனால் உங்களுக்கு நல்லது என்று சொல்லியிருக்கிறேன். முகத்தில் சிரிப்பு வரும்.

போகிறேன். என்னுடைய அக்கா அதுகளுக்கு கூட்டிப் போவார்.

நல்லது. நல்லது. உங்கள் சுவாச.

திடீரென்று சின்னநாயகி எழுந்து நின்று தாதி வெப்பமானியை உதறுவது போல கையை உதறினார். மருத்துவருடைய குறிப்பை மறந்துவிட்டதாகக் கூறி கைப்பையில் துளாவி எடுத்து அதை நீட்டினார்.

உங்கள் மருத்துவர் சுவாசப் பிரச்சினை பற்றி எழுதியிருக்கிறார்.

மூச்சு விடக் கஷ்டம். பாதி மூச்சுத் தான் வருகிறது. சுவாசப்பை நிறைவதே இல்லை. உடனே களைப்பும் வருகிறது என்றுவிட்டு இளைத்தார். நீங்கள் உங்கள் சமூகக் கூட்டங்களில் பாடியுள்ளதாக முன்பு சொன்னீர்களே. எங்கே ஒரு பாட்டுப் பாடுங்கள் பார்ப்போம். உடனே சின்னநாயகியிடம் ஒரு மாற்றம் வந்தது. முகத்திலே சிரிப்பு போல ஒன்று தோன்றியது. அழகாகக்கூட தெரிந்தார்.

**சுவாசமே சுவாசமே**
**என்ன சொல்லி என்னை சொல்ல**
**காதல் என்னை கையால் தள்ள**
**இதயம்தான் சரிந்ததே உன்னிடம்**
**சுவாசமே சுவாசமே.**

அவர் பாட்டில் கொஞ்சம் மீதி இன்னும் இருந்தது. இரண்டு மைல் ஓடியதுபோல அவருக்கு மேலும் கீழும் இழுத்தது. நான் திகிலுடன் மொழிபெயர்க்க வேண்டுமா என்பது போல பார்த்தேன். எமூனா வேண்டாம் என்றார். திடீரென்று வலி வருகிறது. சிவப்பு மாத்திரை போட்டாலும் போகுதில்லை. மஞ்சள் போட்டாலும் போகுதில்லை. அது நினைத்த பாட்டுக்கு வருகிறது. நினைத்த நேரம் போகிறது.

கழுத்து வலியா?

இல்லை, கை வலி.

அங்கேயுமா? நடுச்சாமத்தில் வலி வந்தால் என்ன செய்வீர்கள்?

கையை நீட்டிக்கொண்டு சுடுதண்ணீர் பைப்பை திறந்துவிடுவேன். முதலில் குளிர்ந்த தண்ணீர் வரும். பின்னர் அது சூடாகி சுடுநீர் வரும். அதை மாறி மாறிப் பிடிப்பேன். வலி போகாது. கொஞ்சம் ஆறுதலாக இருக்கும்.

உங்கள் கணவரையும் நீங்கள்தான் பார்க்கவேண்டுமா?

வேறு ஆர்? நான்தான் பார்க்கவேண்டும். அவருடைய மறதி என்னிலும் மோசம். குளிர் பெட்டியை திறந்து தலையை நுழைத்து எதையோ தேடுவார். ஆனால் மறந்துவிடுவார். கதவு வந்து அவர் குண்டியில் அடிக்கும். அப்படியே உறைந்த கல்லைப்போல நிற்பார்.

போனதடவை உங்களுக்கும் மறதி வருகிறது என்று சொன்னீர்களே.

அதுதான் மோசம். பக்கத்து கடைக்கு போனால் என்ன சாமான் வாங்க வந்தேன் என்பது நினைவில் இல்லை. ஒருநாள் எங்கே நிற்கிறேன் என்பது மறந்துவிட்டது. என்னுடைய வீட்டு முகவரியும் ஞாபகத்தில் இல்லை. ஒன்பது வயதுச் சிறுமி ஒருத்தி என் கையைப் பிடித்து அழைத்துப்போய் வீட்டில் சேர்த்தாள். உங்கள் பெயரையும் முகவரியையும் டெலிபோன் நம்பரையும் ஓர் அட்டையில் எழுதி அதை எந்நேரமும் கழுத்தில் தொங்க விடவேண்டும். அதை கடந்த தடவை சொன்னேனே.

அதுவும் எனக்கு மறந்துபோனது.

உங்கள் கால்வலி எப்படி?

உடனேயே சின்னநாயகியின் முகம் மலர்ந்தது. சொல்லவேணும் சொல்ல வேணும் என்று நினைத்து வந்தனான். எல்லாம் மறந்துவிட்டது.

26 ஆம் பக்கம் பார்க்க...

தாயகத்தில்... வவுனியாவில் அமைந்துள்ள
"பண்டாரவன்னியன் புத்தகசாலையில்"
ஈழத்துப் புத்தகங்களை நீங்கள் பெறமுடியும்.

தொடர்புகளுக்கு:
பண்டாரவன்னியன் புத்தகசாலை
வவுனியா, இலங்கை
+94772244616
youtube@akkakuruvi

இது வெற்றிமணியின்
ஒரு இலவச விளம்பரம்.
நம் இளைஞர்கள்
முயற்சிக்கு
கைகொடுப்போம்!



# பொன்னாங்காணியும் அலிகேற்றர் என்னும் களையும்

ஆ.சி.கந்தராஜா
(அவுஸ்திரேலியா)

பொன்னாங்காணி என்ற பெயரில் தற்போது அலிகேற்றர் (alligator weed) என்னும் களையை உண்பது மீண்டும் அதிகரித்திருப்பது அவதானத்துக்கு வந்துள்ளது. 20 வருடங்களுக்கு முன்னர், பொன்னாங்காணி என நினைத்து அலிகேற்றர் என்னும் களையை, ஆஸ்திரேலியாவில் வாழும் இலங்கை மக்கள் உண்பது அவதானிக்கப் பட்டு, விவசாய இலாகாவினால் பாரிய சிரமத்தின் மத்தியில் அழிக்கப்பட்டது.

பொன்னாங்காணியைப் போன்ற தோற்றமுடைய அலிகேற்றர் என்பது நீரிலும் நிலத்திலும் வாழும் ஒரு களை. இது நீண்ட பலமான வேர்களைக் கொண்டுள்ளதால் விரைவில் படர்ந்து வளர்ந்து நீர் வழிகளையும் வடிகால் குழாய்களையும் அடைத்துக்கொள்ளும்.



இதில் சௌக்கியத்துக்குக் கேடான மூலகங்கள் (Heavy elements) இருப்பது பகுப்பாய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்து. தற்போதைய பிரச்சனை என்னவென்றால், இந்த அலிகேற்றர் களையை பொன்னாங்காணி என்ற பெயரில், இலங்கையில் வளர்ப்பதும் சந்தையில் விற்ப்பதும் அவதானிக்கப்பட்டுள்ளது. பொன்னாங்காணியையும் அலிகேற்றர் களையையும் எப்படி இனங்காண்பது?

1) பொன்னாங்காணியின் ஒவ்வொரு கணுக்களிலும் (Node) பூ இருக்கும். ஆனால் அலிகேற்றர் களையில் தண்டு நுனியில் (Apical or terminal) மட்டும் பூ இருக்கும். கீழேயுள்ள கணுக்களில் பூ இருக்காது.

2) பொன்னாங்காணியின் தன்டை முறித்துப்பார்த்தால் தண்டின் நடுவே துவாரம் இருக்காது. தண்டு நிரம்பியிருக்கும். இதேவேளை அலிகேற்றர் களையில் தண்டின் நடுவே துவாரம் (ஓட்டை) இருக்கும். எனவே பொன்னாங்காணி வாங்கும்போது தண்டை முறித்துப்பார்த்து ஒவ்வொரு கணுவிலும் பூக்கள் இருக்கிறனவா என அவதானித்து வாங்கவும்.

---

25 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## முதல் சம்பளம்

அந்த வலியை விளங்கப்படுத்தவே முடியாது. எலும்புக்குள் இருந்து தொடங்கும். வித்தியாசமானது.

அது என்ன வித்தியாசமான வலி?

வித்தியாசம் என்றால் வித்தியாசம்தான். அமெரிக்கா காசும் காசு. கனடா காசும் காசு. ஆனால் வித்தியாசம் இருக்கிறதல்லவா?

எழூனா சிரித்தார். நானும் சிரித்தேன்.

உடனேயே சின்னநாயகிக்கு உசார் வந்து இடது கால் சப்பாத்தை அதிகாரிக்கு காட்டுவதற்காக சட்டென்று குனிந்து அகற்றினார். மோசமான நாற்றம் ஒன்று எழுந்தது. சதை அழுகிய மணம். காற்றின் நிறம்கூட மாறியது போல எனக்குப் பட்டது. எழூனா பார்க்க முன்னரே நான் அவர் பாதத்தை பார்த்து விட்டேன். வீங்கி வரிவரியாக சிவந்துபோய் முயல்குட்டி போல உட்கார்ந்திருந்தது. கால் விரல்கள் ஒன்றுடன் ஒன்று ஒட்டிப்போய் வாத்தின் விரல்கள்போல ஆகிவிட்டன.

'மூடுங்கள், மூடுங்கள்' என்று எழூனா கத்தினார்.

இப்பொழுது வலி எண் என்ன?

அவர் 'ரென்' என்று ஆங்கிலத்தில் சொன்னார்.

சில நாட்கள் கழித்து அந்தப் பெண்ணுக்கு இழப்பீடு கிடைத்துவிட்டதாக அறிந்தேன். தொகை தெரியவில்லை. ஒரு லட்சம்




டொலராக இருக்கலாம். ஒரு மில்லியனாக இருந்தாலும் அதிசயப்படக் கூடாது. அந்தப் பணத்தில் ஒரு சொட்டு என் உழைப்பும் இருக்கிறது. எழூனாவின் கோப்பில் சின்னநாயகியின் விபத்துக்கு முன்னரான அழகான படம் இருந்தது. சிரித்த முகம். ஒரேயொரு கணம் நடந்த விபத்தில் அவர் முகம் அப்படி மாறிவிட்டது. இனிமேல் அவருக்கு அதுதான் முகம். ஒரு மில்லியன் டொலர்கூட அந்த வலி முகத்தை மாற்றமுடியாது.

இன்று என்னுடைய சம்பளக் காசு 50 டொலர் வந்தது. ஊபரில் போக 48 டொலர். திரும்ப 48 டொலர் மொத்தம் 96 டொலர். இந்த விவகாரத்தில் எனக்கு நட்டம் 46 டொலர். ஆனாலும் என் முதல் சம்பளம். அப்படியே, அது என்ன வார்த்தை, உடம்பு எல்லாம் புளகாங்கிதம் அடைந்தது.



# யேர்மனியில் திருவள்ளுவர் சிலை ஒப்பந்தம் கைச்சாத்தாகியது









கடந்த 28.08.2023 திங்கட்கிழமை அன்று தமிழர் அரங்கத்தில் திருவள்ளுவர் சிலை சம்பந்தமான முக்கியமான ஒப்பந்தம் ஒன்று எமக்கும் நகரசபைக்கும் இடையில் கைச்சாத்தாகியது. நாம் வழங்கும் திருவள்ளுவர் சிலையை ஏற்றுக் கொள்வதுடன் பராமரிப்பையும் நகரசபை பொறுப்பேற்கும் என்பது ஒப்பந்தத்தின் சாராம்சமாகும்.

திருவள்ளுவர் சிலை தமிழர்களின் கடைகள் பெருவாரியாய் அமைந்துள்ள Rheinische Str வீதியில் அமைக்கப் படுகிறது.

இவ் ஒப்பந்தத்தில் டோட்முண்ட நகரசபை சார்பில் அதன் நகர இயக்கு னரும் கலாச்சார அலுவல்களுக்கு பொறு ப்பானவருமான திரு ஜோர்க் ஸ்ருடமன் அவர்கள் கைச்சாத்திட்டார். எம் பக்கத்தில் இருந்து தமிழர் அரங்கம் நிர்வாகிகளான திருமதி கலைநிதி சபேசன் அவர்களும், திரு சுப்ரமணியம் பாக்கிய நாதன் அவர்க ளும் கைச்சாத்திட்டார்கள்.

டோட்முண்ட் நகரத்தில் திருவள்ளுவர் சிலையை அமைப்பதற்கு மகிழ்ச்சியையும் நன்றியையும் தமிழ் மக்களுக்கு தெரிவிப்ப தாக நகர இயக்குனர் திரு ஜோர்க் ஸ்ருடமன் அவர்கள் கூறினார். தமிழ் மக்களுக்கு டோட் முண்ட் நகரசபை வழங்குகின்ற ஆதரவி ற்கு நாமும் நன்றியை தெரிவித்தோம். சிறு கலந்துரையாடலுடன் நிகழ்வு நிறைவு பெற்றது.

திருவள்ளுவர் சிலை அமைப்பதற்கு செய்ய வேண்டிய அலுவலகரீதியான பணிகள் இவ் ஒப்பந்தத்துடன் பெருமளவு நிறைவுக்கு வந்துள்ளன. இன்னும் ஓரிரு வாரங்களில் சிலை வைப்பதற்கான பீடத் திற்கான அத்திவாரம் தோண்டுகின்ற வேலைகள் ஆரம்பமாக உள்ளன. மறுபுறம் திருவள்ளுவர் சிலையும் செய்யப்படுகின்றது. திருவள்ளுவர் சிலை அமைக்கும் உயரிய பணியில் அனைவரையும் இணையும்படி அன்போடு அழைக்கின் றோம். உங்களால் முடிந்த பங்களிப்பை வழங்குங்கள். சிலை திறப்பு விழாவின் போது பங்களித்தவர்களின் பெயர் விபரங்களோடு முழுக் கணக்கறிக்கை வெளி யிடப்படும்.

**எல்லோரும் இணைந்து திருவள்ளுவருக்கு ஒரு சிலை அமைப்போம்.**

**இதுவே எமது வங்கி இலக்கம்:**

**Verein fuer tamilsche Kuenstler e.V.**
**Volksbank Dortmund Nord West**
**DE09 4406 0122 4086 4321 00**
**GENODEM1DNW**

---

# தமிழினப்படுகோலை ஆவணக்கையேடு



தமிழினத்தின் மீது உலக வல்லா திக்கங்கள் நிகழ்த்திய இன அழிப் பினைத் தொகுத்து ஆதாரபூர்வ மாக வெளியிட்டிருக்கிறார் யேர்மனி யைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவியான தட்சா அவர்கள்.

தாயகத்திலிருந்து புலம்பெயர்ந்த குடும்பமொன்றின் இரண்டாம்தலை முறையான தட்சா அவர்கள், தமிழ் மொழியை நேர்த்தியாகக் கற்றுத் தேர்ந்தவர். தனது தாய்மண்ணின் மீது கொண்ட பற்றின் விளைவா கவும், தனது இனத்திற்கு நேர்ந்த இனப்படுகொலையை வெளியுல கிற்கு எடுத்தியம்ப வேண்டும் என்ற அவாவின் விளைவா கவும், அவர் தொகுத்து வெளி யிட்ட "தமிழி னப்படுகொலை ஆவணக்கை யேடு" - Genocide Chronicle எனும் நூல் தற்போது உலகெங்கும் கிடைக்கிறது. தமிழர்களாகிய நாம் ஏன் புலம்பெ யர்ந்தோம் என்பதற்கு இந்நூ ல் ஓர் முற்றுமுழுவதுமாக விடை தரும். 30sec2remember எனும் பெயருடைய Face-book, Instagram,Twitter தளங்களூடாகவும் அவர் இந்த ஆவணங்களை எண்ணிமத் தளங்களுக்கு மாற்றி, மிகவும் சிறப்பாக ஆவணப்படுத்தியிருக்கி றார். அவர் மேற்கொண்ட இப்பணி பெறுமதி மிக்கது..

Münster க்கு அருகாமையில் Warendorf நகரில்....
RESTAURANT
Westfälischer Hof
Saal Und Restaurant!
Telefon: +49 2584 9348481
Bartholomäusstraße 29, 48231
Warendorf, Germany

எமது Restaurant இல் வேலைக்கு சமையல் தெரிந்த ஒருவர் (cook) உடனடியாகத் தேவை. தொடர்பு கொள்ளவும்.

உங்கள் நிகழ்ச்சிகளை அழகுடனும் சுவையுடனும் செய்திட
எமது மண்டபம் அழைக்கிறது
பிறந்த நாள், நத்தார் தினக் கொண்டாட்டம், திருமண விருந்து மற்றும் எந்தச் சிறப்பு நிகழ்வுகள் என்றாலும் எம்மிடம் உணவு சிற்றுண்டிகள் உட்பட யாவும் செய்து தருகின்றோம். விருந்தினர்கள் விளையாட Kegelbahn ம் உண்டு.
அழகிய மண்டபம் தொடர்புகளுக்கு 01794855554
Restaurant 60 Sitzplätze | Kegelbahn 30 Personen
Biergarten kann 200 Plätze
Saal 300 Plätze
Öffnungszeiten: Geöffnet . Schließt um 23:00| Telefon: +49 2584 9348481

21 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## நெடுஞ்சுடர்

### G என்றால் Gay:

ஆணும் ஆணும் பாலியல் ரீதியாகத் தொடர்பு கொள்வதை புயல என்ற சொல்லால் அழைக்கின்றார்கள்.

தாரகா முனிவர்களின் தவத்தை சோதிப்ப தற்காக விஸ்ணு மோகினி உருவம் எடுத்ததாகவும் அந்த மோகினியை கண்டு சிவன் மோகித்த போது இருவருக்கும் பிறந்த குழந்தையே ஐயப்பன் என்றும் புராணக்கதை கூறுகிறது. கோயில் சிற்பங்களில் சிவனுடைய ஆண்குறியை விஸ்ணு பிடித்துக் கொண்டிருக்கின்ற சிற்பம் இருக்கின்றது. விஸ்ணு மோகினியாக மாறியது Transgender. மாறிய விஸ்ணுவும் சிவனும் கூடியது புயல. ஐயப்பன் சுவாமி உருவாகிய கதை LGBTQ க்குள் அடங்குகின்றது.

### B என்பது Beisexual:

இவர்களுக்கு ஆண், பெண் என்ற இருபாலினத்தினரின் மேலும் கவர்ச்சி ஏற்படும். ஆணைக் கண்டாலும் பாலுணர்வு மேலெழும் பெண்ணைக் கண்டாலும் பாலுணர்வு ஏற்படும். ஆனால், இது எல்லோரின் மேலும் ஏற்படும் என்று சொல்ல முடியாது. யாரில் பாலினக் கவர்ச்சி ஏற்படுகின்றதோ அதன்படி அவர்கள் தம்முடைய விருப்பத்தை நிறைவு செய்வார்கள்.

### T என்பது Transgnder:

இவர்கள் பிறக்கும் போது ஆணாகவோ பெண்ணாகவோ பிறக்கின்றார்கள். ஆனால், காலப்போக்கில் இவர்களுக்கு உடலிலுள்ள ஹோர்மோன் இயற்கையாகவே மாற்றத்தையடைந்து பாலின மாற்றம் ஏற்படுகின்றது. ஆணாக இருப்பவர்கள் உறுப்புக்களால் ஆணாக இருந்தாலும் தம்முடைய உள் உணர்வுகளிலே தம்மைப் பெண்ணாகவே நினைக்கின்றார்கள். அதேபோல் உடல் உறுப்புக்களால் பெண்ணாக இருப்பவர்களும் மன உணர்வுகளால் ஆணாகவே தம்மைக் கருதுகின்றார்கள். அவர்களுடைய நடையுடை பாவனை மாற்றுப் பாலினமாக இருக்கின்றது. இவர்களை திருநங்கை, திருநம்பி என்று அழைப்பார்கள்.

### Queer:

ஆணும் பெண்ணும் திருமணம் செய்து வாழும் வாழ்க்கையை நாம் Normal என்று கருதுகின்றோம். ஆனால் இப்போது Normal என்பதே கிடையாது. எதை நாம் Normal என்று சொல்ல முடியும். ஏன் நாங்கள் என்ன விசித்திரமா? என்று கேள்வி எழுப்புகின்றார்கள். ஆண் ஆண் போலே இருத்தல். பெண் பெண் போலே இருத்தல் என்று சொல்வது போலே நான் இல்லை என்பவர்களே ஞரநநச என்பவர்கள்.

இதைவிட Questioning, Intersex, Assexual, Aromantic, Pansexual, Non-Binary or Envy, Genderfluid, Genderqueer, Agender, Stud, Muke, MaHu,Hetarosexism, Cisgender, போன்ற பிரிவுகளும் இருக்கின்றன.

Aromantic என்பவர்களுக்கு எதிலும் நாட்டம் இருப்பதில்லை. காமமோ, காதலோ எதிலுமே ஈடுபாடு இருப்பதில்லை. இவர்கள் எல்லோருடனும் நண்பர்களாக இருக்கவே விரும்புவார்கள். தற்போது குடும்பங்களில் பெற்றோர்கள் போடுகின்ற சண்டைகளைப் பார்க்கும் பிள்ளைகள் இந்தக் குடும்ப அமைப்பே வேண்டாம் என்று Aromatic ஆக வாழ முற்படுகின்றார்கள். இதற்காக அவர்கள் கூறுகின்ற காரணங்கள் பெற்றோருக்குச் சவாலாக இருக்கிறது.

தொல்காப்பியம் என்னும் நூல் பெருந்திணைக்குக் குறிப்பிடும் நான்கு பண்புகளில் தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறன் என்பதை மட்டும் உரை பிரதிகளை மறுதலித்துவிட்டு வாசித்தால் அவை அங்கீகரிக்கப்பட்ட Heterosexual தன்மையைக் கடந்து வேறு பல காதல் வகை மாதிரிகளைப் பேசுவதற்கான திறப்பு கொண்டிருப்பதை உணர முடியும் என கவிஞர் மனோ மோகன் குறிப்பிடுகின்றார்.

ஆண்கள் விடுதிகளும், பெண்கள் விடுதிகளும், பிரமச்சாரிகளும் இவ்வாறான பிரச்சினைக்குள் அகப்படுவதை அறியக்கூடியதாக இருக்கின்றது.

இப்போது சிறுவயதிலேயே இதுபற்றிய வேறுபாட்டினைப் பாடசாலையில் கற்பிக்க வேண்டும் என்று கருதுகின்றார்கள். ஏனென்றால், ஒரு பிள்ளை சிறுவயதாக இருக்கும் போதே பெண்பிள்ளைகளுக்கு ரோசா நிற ஆடைகளை அணியவைத்து, பொம்மைகளை விளையாடக் கொடுத்து பெண் என்பதைப் பெற்றோரே மனதில் பதிக்கின்றார்கள். ஆண்களுக்கு வாகன பொம்மைகளை விளையாடக் கொடுத்து நீல நிற ஆடைகளை அணியக் கொடுத்து அவர்களை ஆண் என்று அடையாளப்படுத்துகின்றார்கள். ஆனால், அந்தப் பிள்ளை ஓரளவு வயதாகும் போது. ஆண் உடைகளை அணிய ஆசைப்பட்டு அந்த ஆடைகளை அணிகின்ற பெண் பிள்ளைகளைப் பாடசாலைகளில் காணுகின்ற போது கேவலமாகப் பார்த்துக் கிண்டல் செய்கின்றது. அந்தப் பிள்ளைகளுக்கு இவ்வாறான பாலினமுள்ள மனிதர்களும் சமூகத்தில் இருக்கின்றார்கள் என்பதை கற்றுத் தர வேண்டிய அவசியம் ஆசிரியர்களுக்கு இருக்கின்றது. அதனாலேயே தனியாக அஞ்சி அஞ்சி வாழுகின்ற பிள்ளைகளை சுதந்திரமான பிள்ளைகளாக வாழ வைக்க முடியும்.

வேறு உணர்வுகள் உள்ள இரு மனிதர்களை நாம் கட்டுப்படுத்தி இணைத்து வைக்கின்ற போதுதான் விருப்பமில்லாது எப்படியோ வாழ்கின்றோம் என்கின்றார்கள். இவர்கள் ஒன்றாக வாழ்கின்றார்கள். ஒன்றாகவா வாழ்கின்றார்கள் என்ற கேள்வி எழுகின்றது. அதுபோல் பல விவாகரத்துக்களும் நடைபெறுகின்றன. அதைவிட அவர்களின் மனதுக்கு ஏற்ப வாழ்ந்தார்களேயானால் அவர்களின் வாழ்க்கை சிறப்பாக அமையும்.

மனித உணர்வுகளை ஏற்றுக் கொள்ள முடியாது போகின்ற போது என்னால், என்னுடைய பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கவில்லை பெற்றோர்களும் உதவி செய்கின்றார்கள் இல்லை என்று நினைக்கும் ஒரு பிள்ளைக்கு உணர்ச்சிக் கட்டுப்பாட்டுப் பிரச்சினை ஏற்படுகின்றது. தம்மைத் தாமே வருத்தி கைகளிலே பிளேட்டினால் கீறித் தம்மைக் காயப்படுத்துகின்றனர். உணர்வுகள் கட்டுப்படுத்தி முறையான குடும்ப வாழ்க்கைக்குள் நுழைபவர்களாலேயே விவாகரத்துக்களும், தற்கொலைகளும் அதிகரிக்கின்றன.

நாம் ஆண் பெண் என்று புறக்கண்ணால் காண்கின்ற மனிதர்களுக்குள் எத்தனையோ மாறுபாடுகள் இருக்கின்றன என்பதை எம்மால் மேலோட்டமாக அறிய முடியாமல் இருக்கின்றது. கடவுள் தந்த உணர்வுகளை மாற்றுவது தப்புத்தானே என்கின்றார்கள். அது கொலைக்குச் சமம் அல்லவா. இது எனக்கு செட் ஆகின்றது. அதை மாற்றுவது கொலையை விட துரோகமானது என்கின்றார்கள். அதனால் இன்று நாம் அனைவரும் சிந்திக்க வேண்டிய அவசியத்துக்குள் ஆளாகி இருக்கின்றோம். ■

09 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## காதல் திருவிழா...

பொக்கற்றுக்க ஆயிரம் ரூபா வைச்சிருந்தவனையும், வடக்கு வீதீல சாமி வரேக்க மடிச்ச சட்டைக்கையோட நான் medical student இல்லாட்டி கம்பஸ் காரன் எண்டு நிக்கிறவனையும் எல்லாம் பாக்காம, நல்லூர் பக்தனா வெறும் மேலோட வாற single pack காரனுக்கு எப்பிடி ஓம் எண்டு சொல்லுறாளவை எண்டிறது முருகனுக்குத் தான் வெளிச்சம்.

என்ன தான் தலைகீழா நிண்டாலும் பல காதல் பயணங்கள் சண்டேஸ்வரர் தேங்காயோட சிதறிப் போக, ஆனாலும் கந்தன் கைவிட மாட்டான் எண்டு அடுத்த முறையும் முருகனிட்டை வாறவை தான் கன பேர். இன்று ஆறாம் நாள் திருவிழா. ■

07 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## பெண்கள் ஏன் அரசியலுக்குள்...

அது பணம் மற்றும் புகழுக்காக என பார்க்கப்படு கிறது.மக்களுக்கு உண்மையாக சேவை செய்ய நினைப்பவர்கள் இப்போது இருக்கிறார்களா என்கிற சந்தேகம் எல்லோருக்குமே இருக்கின்ற நிலையில் அப்படி ஒன்றிரண்டு பேர் இருந்தாலும் அவர்களையும் நம்பமுடியாத சூழல் உள்ளது என்பதனால் அரசியலில் பெண்களின் வகிபாகம் இந்த இடத்திலும் கேள்விக்குள்ளாக்கப்பட்டு விடுகின்றது என்பதே உண்மை.

இப்படிப்பட்ட ஈடுபாடு மற்றும் தார்மீக ரீதியான அணுகுமுறையில் உள்ள மாற்றங்கள் தான், வீடு முதல் அரசியல் வரை ஆண்-பெண் இடையிலான வேற்றுமைக்கும் பாகுபாட்டிற்கும் அடித்தளம் இடுவதாக கருதப்படுகின்றது. இங்கே நான் இன்னுமோர் விடயமதனையும் குறிப்பிட விரும்புகின்றேன், பெண்களாகிய நாமும் நம்முடைய நிலைமைக்கு இன்னுமே அடுத்தவரை காரணம்காட்டிக் கொண்டிராது நாமும் நமது நிலைமையை மாற்றிக்கொள்ள முயலவேண்டும் அனைத்து விடயங்களிலும். தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பற்றியும், ஆடை அலங்காரங்கள்பற்றியும் , அன்றாட வீட்டு வேலைகள் பற்றியுமே சிலாகித்து திரியும் நாம், நம் வீடுகளில் அரசியல் பேச வேண்டும். பணியிடங்களில், நண்பர்களோடு உரையாடுகையில் நாட்டின் சூழலை, அரசியலை கலந்து ஆலோசிக்க பெண்களாகிய நாம் முன்வரவேண்டும். இவ்வாறு பேசும்போது அரசியல் நிலைமை பற்றிய சுயமான, தீர்க்கமான ஒரு தெளிவு நமக்கு கிட்டக்கூடும்.

பெண்களுக்கான உரிமைகள் கிடைக்க பெண் பிரதிநிதித்துவம் மிகவும் அவசியம். வாரிசுகள் அல்லாத கணவரோ, அப்பாவோ நிழலாக செயல்படாத தனி பெண் ஆளுமைகள் உருவாகுதல் என்பது மிக மிக அவசியம். அவர்களால் மட்டும்தான் பெண்களுக்காக சிந்திக்க முடியும். அப்படி உருவாக வேண்டுமானால் பெண்கள் முதலில் சகஜமாக அரசியல் பேச வேண்டும். ■










# விம்பம்- இலண்டன்- இலக்கியம்











**ரூபன் சிவராஜா (நோர்வே)**

வாசிப்பவர்களையும் எழுதுபவர்களையும் கலை - இலக்கியச் செயற்பாட்டாளர்களையும் சந்தித்து உரையாடுவதும் ஊடாடுவதும் எப்பொழுதும் மனதிற்கு இதம் தரும் அனுபவம்.

லண்டன் 'விம்பம்' அமைப்பினரின் ஏற்பாட்டில் 9 பெண் படைபாளிகளின் புனைவு - அபுனைவு நூல்களின் அறிமுக-விமர்சன-உரையாடல் அரங்கு 19.08.23 ( Trinity Centre> East Ham இல்) நடைபெற்றது. இந்நிகழ்விற் கலந்து கொண்டு, Harriet Jacobs எழுதிய 'ஓர் அடிமைச் சிறுமியின் வாழ்க்கை நிகழ்வுகள் Incidents in the life of a slave girl நூல் பற்றி உரையாற்றியிருந்தேன்.

கருத்தரங்கிற்குத் தேர்வுசெய்யப்பட்ட ஒன்பது நூல்களும் காத்திரமான உரையாடல் வெளிகளைத் திறக்கக்கூடியவை. நூல்களைப் பற்றி உரையாற்றியவர்களிற் பெரும்பான்மையினர் பெண்கள் என்பதும் நிகழ்வின் முக்கிய அம்சம். நோர்வேயில் அது குதிரைக் கொம்பு.

விம்பம் அமைப்பு தொடர்ந்து பல நூல் அறிமுக அரங்குகளை நடாத்துவதனூடாக இலக்கிய உரையாடல்களுக்கான வெளியை ஏற்படுத்திவருகின்றது. கலை - இலக்கிய நிகழ்வுகளை வெற்றிகரமாக ஏற்பாடு செய்வதில் எதிர்கொள்ளக்கூடிய சவால்களை அநுபவரீதியாக அறிந்தவன் என்ற வகையில் பிம்பம் அமைப்பின் தொடர்ச்சியான இலக்கியச் செயற்பாடுகள் பாராட்டிற்குரியவை. நிகழ்வினைச் சிறப்புற ஒழுங்கமைத்த ராஜா அண்ணை, சாந்தன் அண்ணை ஆகியோருக்கும் ஏனைய நண்பர்களுக்கும் நன்றி.

நிகழ்வின் இடையில் என்னுடன் ஒரு குறு நேர்காணலை மாதவி சிவலீலன் அவர்கள் மேற்கொண்டிருந்தார். எனது எழுத்துகள், புத்தகங்கள் பற்றிய ஒரு சிறு அறிமுகத்தையும் அநுபவங்களையும் பகிர்வதற்கான உரையாடல். கேட்கப்பட்ட கேள்விகளிற் சில விரிவான உரையாடல்களைக் கோரி நிற்பவை.நேரநெருக்கடி காரணமாக சுருக்கமான பதில்களையே வழங்க வேண்டியிருந்தது. ■

- நிகழ்வின் ஒளிப்படங்கள்: எஸ்.சாந்தன்






## வெற்றிமணி வெளியீடு : 28

# யேர்மனியில் தமிழர் அரங்கம் நிறைந்து வழிந்தது!

**'வைகல்' நூல் ஆசிரியர் : கரிணி**

















கடந்த 24.09.2023 யேர்மனியில் வெற்றிமணி பத்திரிகையின் 28 வது நூல் வெளியீடாக கரிணி கண்ணன் அவர்களின் வைகல் நூல் வெளியீட்டு விழா, மண்டபம் நிறைந்த மக்களோடு சிறப்பாக நடைபெற்றது.

மேலும் விழா Dortmund தமிழர் அரங்கத்தில் பிற்பகல் 4.30 மணிக்கு மங்கல விளக்கேற்றல், தேவாரம், அகவணக்கம், தமிழ் தாய்வாழ்த்து, வரவேற்பு நடனம் இவற்றுடன் ஆரம்பமானது.

கரிணி அவர்கள் கடந்த 7 வருடங்களாக வெற்றிமணி பத்திரிகையில், இயற்கை, யோகாப்பயிற்சி, உடல், மனம், ஆரோக்கியவாழ்வு சம்மந்தமாக பல கட்டுரைகளை எழுதி வருபவர்.

அவர் எழுதியவற்றுள் சில தெரிவு



செய்யப்பட்டு, வைகல் என்ற பெயருடன் நூலுருப்பெற்று இன்று வெளியானது.

நூல் ஆய்வினை நூலாசிரியர் அவர்களின் ஆசிரியர் கௌரி ஜெயக்குமார் அவர்கள் சிறப்பாக ஆய்வுசெய்தார். வெளியீட்டு உரையை வெற்றிமணி பத்திரிகை ஆசிரியர் மு.க.சு.சிவகுமாரன் அவர்கள் நிகழ்த்தினார். அவர் தன்னுரையில் கரிணியின் முதல் அறிமுகம் நடந்த இதே மண்டபத்தில் அவர் நூலை வெற்றிமணி வெளியிடுவது மகிழ்ச்சி எனவும், வெற்றிமணி யின் வெளியீட்டு பாரம்பரியம் பற்றியும் சுருக்கமாக குறிப்பிட்டு.

நூலுக்கு அணிந்துரை, தந்த முனைவர் மனோன்மணி சண்முகதாஸ், அவர்களுக்கும், அறிவுரைகள் தந்த பேராசிரியர் அ.சண்முகதாஸ், ஆசியுரை தந்த செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் அவர்களுக்கும் நன்றி தெரிவித்தார். வாழ்த்துரைகளை பல இலக்கிய நண்பர்கள் வழங்கினர். நூலின் முதல் பிரதியை கலைவிளக்கு சு. பாக்கியநாதன் அவர்கள் பெற்றுக் கொண்டார். மேற்படி விழாவில், வெற்றிமணி தயாரிப்பான 'எழுதாத கவிதைக்கு முதல் பரிசு' மற்றும் ஆமாசாமி ஆகிய குறும்படங்கள் திரையிடப்பட்டன.

படத்தின் கருவும், காட்சிகள் நடிப்பு சிறப்பாக இருந்தன, டப்பிங்குரல் இந்திய தமிழ் மக்கள் குரல் தாயகத்தின் குரலோடு அந்நியப்பட்டு இருந்ததாக இயக்குனர் வி.சபேசன் தன் கருத்தை முன்வைத்தார். இசையை பலரும் பாராட்டினர். அதனைத் தொடர்ந்து நூலாசிரியர் கரிணி அவர்களின் பதிலுரையுடன் விழா நிறைவுற்றது. நிகழ்ச்சிகளை சகநாயகன் சக்திவேல் அவர்கள் சிறப்பாக தொகுத்து வழங்கினார். அனைவருக்கும் இராபோசனம் வழங்கப்பட்டது.

மக்கள் நிறைந்த ஒரு கூட்டமாக, வெற்றிமணி வெளியீட்டு விழா முத்திரை பதித்தது.

படங்கள்: ஆன்மிகத் தென்றல்
த.புவனேந்திரன்,
தமிழ் MTV சிவநேசன்



# ஜவான் திரைப்படம்
## வசூலில் கலக்கி வருகிறது

**ஷாருக்கானுக்கு முத்தம் கொடுத்த தீபிகா படுகோனே..!**



இயக்குனர் அட்லீ இயக்கத்தில் நடிகர் ஷாருக்கான், விஜய்சேதுபதி, நயன்தாரா, தீபிகா படுகோனே உள்ளிட்டோர் நடிப்பில் கடந்த செப்டம்பர் 7-ஆம் திகதி திரையரங்குகளில் வெளியான திரைப்படம் ஜவான். இந்த திரைப்படம் ரசிகர்களுக்கு மத்தியில் நல்ல வரவேற்பை பெற்று வசூலில் கலக்கி வருகிறது. தமிழ், தெலுங்கு, இந்தி உள்ளிட்ட மொழிகளிலும் படம் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது.

கோலிவுட் முதல் பாலிவுட் வரை இந்த ஜவான் திரைப்படம் வசூலில் கலக்கி வருகிறது. உலகம் முழுவதும் வசூலில் இப்படம் தற்போது வரை ரூ.700 கோடியை எட்டியுள்ளது. இந்நிலையில், மும்பையில் செய்தியாளர்கள் சந்திப்பை ஜவான் படக்குழு நடத்தினர். நன்றி சொல்லும் விதமாக இந்த செய்தியாளர்கள் சந்திப்பில், ஷாருக்கான், தீபிகா படுகோனே, அனிருத், அட்லீ என பலரும் கலந்துகொண்டனர்.

அட்லீ உள்ளிட்ட அனைவருக்கும் ஷாருக்கான் பாராட்டுத் தெரிவித்தார். மேலும், இந்த நிகழ்வில் சில ஜாலியான நிகழ்வுகளும் நடைபெற்றன. குறிப்பாக, ஜவான் வெற்றிக்காக ஷாருக்கானை கட்டியணைத்து நடிகை தீபிகா படுகோனே, சர்ப்ரைஸாக முத்தம் கொடுத்து அசத்தினார். இது அனைவரது கவனத்தையும் ஈர்த்தது.



## 36 ஆண்டுகளுக்குப் பிறகு
# கமலின்
# 'பேசும் படம்'

சங்கீதம் சீனிவாச ராவ் இயக்கத்தில் நடிகர் கமல்ஹாசன், நடிகை அமலா ஆகியோர் நடித்த 'பேசும் படம்' என்ற திரைப்படம் கடந்த 1987-ம் ஆண்டு வெளியானது.

கன்னடத்தில் 'புஷ்பக விமானா' என்ற பெயரில் ரிலீசான இந்த படம் வசனங்கள், பாடல்கள் என எதுவும் இல்லாமல் காதல், நகைச்சுவை, ஆக்ஷன் என அனைத்தும் கலந்து வித்தியாசமான முறையில் உருவாக்கப்பட்டிருந்தது.

இந்த படம் வெளியான சமயத்தில் ரசிகர்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்று வசூல் சாதனையும் புரிந்தது. இந்நிலையில் தற்போது 36 ஆண்டுகளுக்குப் பிறகு கமலின் 'பேசும் படம்' மீண்டும் திரையரங்குகளில் வெளியிடப்பட உள்ளது.

இதனை கமல்ஹாசனுக்கு சொந்தமான ராஜ்கமல் பிலிம்ஸ் நிறுவனம் போஸ்டர் வெளியிட்டு அறிவித்துள்ளது.

## சினிமாவில் வளர்த்துவிட்ட
# ரஜனி கமல் நட்பு



நடிகர் கமல்ஹாசன் துபாயில் நடந்த திரைப்பட விருது வழங்கும் விழா நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்டார். அப்போது கமல்ஹாசன் பேசும்போது, "ரஜினிகாந்த் படத்தை லோகேஷ் கனகராஜ் இயக்குகிறார். உடனே, 'என்னங்க..அவர் (ரஜினிகாந்த்) படம் பண்றாரு?...' என்று கேட்கிறார்கள். அப்படி கேட்பவர்களுக்கு அவ்வளவுதான் தெளிவு.

எனக்கும், ரஜினிகாந்துக்கும் இடையேயான நட்பு, இதற்கு முன்னதான தலைமுறையில் இல்லை என்று ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். அந்த சவாலை நாம் பின்னோக்கி விட்டதற்கான காரணம், இனி வரமாட்டார்கள் என்ற சாபமாக கொடுக்காமல், இதனை வாழ்த்தாக சொல்லிக்கொள்கிறேன்.

எங்களுக்குள் இருக்கும் அந்த நட்புதான் எங்கள் சினிமா வாழ்க்கையையே வளர்த்தது என்றால் அது மிகையாகாது, என்றார்.



# தொழில் அதிபராக நயன்தாரா

நடிகர் - நடிகைகள் சினிமாவை தாண்டி ரியல் எஸ்டேட், கட்டுமானம், நகை வியாபாரம், ஓட்டல்கள் என்று பல தொழில்களில் பணத்தை முதலீடு செய்து வருமானம் பார்க்கிறார்கள்.

இந்த வரிசையில் தமிழ், திரையுலகில் முன்னணி கதாநாயகியாக கொடி கட்டி பறக்கும் நயன்தாராவும் தொழில் துறையில் இறங்கி இருக்கிறார்.

ஏற்கனவே கணவர் விக்னேஷ் சிவனுடன் இணைந்து படங்கள் தயாரிக்கிறார். கேரளாவில் பல ஏக்கரில் நிலங்கள் வாங்கி போட்டுள்ளார். வீடுகள், அலுவலகங்கள் கட்டி வாடகைக்கு விட்டு இருப்பதாகவும் கூறப்படுகிறது. தொடர்ந்து அழகு சாதன பொருட்கள் தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டார்.

தற்போது வெளிநாட்டு நிறுவனத்துடன் இணைந்து சரும பராமரிப்பு தொடர்பான அழகு சாதன பொருட்களை தயாரித்து விற்பனை செய்யும் தொழிலில் இறங்கி இருக்கிறார். இதன்மூலம் சர்வதேச தொழில் அதிபராக மாறி இருக்கிறார்.




செல்வி தரணிகா பத்மபாதனின்
**பரத நாட்டிய அரங்கேற்றம்**
28.10.2023 சனிக்கிழமை



சலங்கை ஒலி நாட்டிய பள்ளி அதிபர் திருமதி சாவித்திரி சரவணன். **M.A.M.Phil in dance** அவர்களின் மாணவியும்திரு திருமதி பத்மபாதன் அவர்களின் புதல்வியுமான செல்வி. தரணிகா. அவர்களின் பரத நாட்டிய அரங்கேற்றம்.
28.10.2023 யேர்மனியில்
**Herne** நகரில் இடம்பெற உள்ளது.

அனைவரையும் அன்புடன் அழைக்குன்றோம்.

**28.10.2023 Gaststätte Volkshaus Röhlinghausen**
**Am Alten Hof28 | 44651 Herne Germany**


Jasmine Silk House
ஆடைகளின் ராணி
ஒளி ஏற்றும் இன்பத் தீபாவளி
எமது மலிவு விற்பனையில்
நீங்களும் கலந்து
பயனடையுங்கள்
'என்றும் புதியது உங்கள் தெரிவுக்கு உகந்தது'
Tel: 02102 844744
HP: 0173 1937 325
"Jasmine Silk House" Fester Str.50- 40882 Ratingen


Kfz-Ingenieurbüro
NADANAM
Sachverständiger | Unfallgutachter
SIE HATTEN EINEN UNFALL? WIR HELFEN!
வாகன விபத்தா? உங்களில் தவறு இல்லையா?
கட்டணம் எதுவுமின்றி நாங்கள் உதவுகிறோம்!
விபத்தினால் ஏற்பட்ட சேதத்திற்கான தொகையை
மிகக் குறுகிய காலத்துக்குள் மதிப்பீடு செய்து தருவோம்.
உடனே எங்களை நாடுங்கள்.
B.Eng. Diesanth Nadanapatham
0175 5086977


PIRRUNTHA SILKS
Exclusive Indian Clothing & Jewelry
Stuttgart நகரில்...
தரம்மிக்க தங்க நகைகள்
நங்கையர் விரும்பும்
நவீன டிசைன்களில்
அமைந்த சேலைகள்
மற்றும் இமிற்றேசன்
நகைகள் அனைத்திற்கும்
நீண்ட கால நம்பிக்கை
மிக்க ஸ்தாபனம்
பிருந்தாஸ்
Ludwig str.87a
70197
Stuttgart
SALE
Tel: 0711 615 8976/ 0170 334 4059


RE/MAX
வீடு வாங்க விற்க
Buy & sell property
Sakthiya Nagaselvam
Immobilienmaklerin IHK § 34c
உலகின் முன்னணி நிறுவனமான Remax அனுபவமிக்க முகவர் ஊடாக (Tamil, German, English)
எளிய வழியில் உரையாடி உங்கள் கனவு இல்லத்தை நினைவாக்குங்கள்.
ஜேர்மனியில் வீடு விற்க விரும்புகின்றீர்களா?
வீடு வாங்க விரும்புகின்றீர்களா?
உங்கள் சொந்த வீட்டின் பெறுமதியை அறிந்து கொள்ள விரும்புகின்றீர்களா?
வீடு வாங்குவதற்குண்டான வங்கிக் கடனைப் பெற்றுக்கொள்ள விரும்புகின்றீர்களா?
மிக இலகு வழியில் வீட்டுக்கடன் பெற்றுக்கொள்வதற்கு ஆலோசனையுடன் கூடிய அனைத்து வழிகளிலும் பெற்றுத்தரப்படும்.
IHRE IMMOBILIE VERKAUFEN?
World No1
Real Estate Agent
மேலதிக விபரங்களுக்கு இன்றே தொடர்பு கொள்ளுங்கள்:
M: +49 176 32329957 | M: +49 52130515180 | E: sakthiya.nagaselvam@remax.de
www.nagaselvam-remax.de


akr
VISUALIZERS
Photography
AKRVISUALIZERS
+49 162 803 1647
akrvisualizers
akrvisualizer@gmail.com
Asselner Hellweg 118 44319 Dortmund


STAR IMPEX
Lebensmittel Grosshandel e.K.
StaR Impex : Inh : K.Sivasubramaniam
Tel: 0231 860 26 96
AGAM
அ.க.ம்
Nila
Double Horse
Aachi
BTM
Rabeena
Franziusstrasse 150 (TOR3) DE -44147 Dortmund
Tel: 0231/8602696| Fax: 0231/8602698